KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage

மலர்:- 33, 04 September 2026 இதழ்:- 24

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணிக்கு உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழம் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 15வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் 12ம் 1ம் 16ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத ஒரு நாடு சர்வதேச நாட்களை எப்படி அனுஷ்டிக்கலாம்?

அண்மையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப் பட்டோருக்கான அமைப்பின் சார்பாக ஊடகங்கள் மத்தியில் பேசிய ஒரு பெண் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத ஒரு நாடு சர்வ தேச நாட்களை எப்படி அனுஷ்டிக்கலாம்? என்று கேட்டிருந்தார்.



அவர் அவ்வாறு தெரிவிப்பதற்கு காரணம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர் நினைவு நாளாகும். அந்த நாள் சர்வதேச ரீதியாக இந்த மாதம் 30 ஆம் திகதி தான் அனுஷ்டிக்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங் கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஆகிய ஓஎம்பி (OMP) அதனை கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் (16ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுடன் வர்த்தகப் போர்! கனடாவை எச்சரிக்கும் வல்லுனர்கள்!

# கனடிய தயாரிப்புகளுக்கு அதிகரிக்கும் வரவேற்பு!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது ஆரம்பித்துள்ள வர்த்தகப் போர் இரண்டு நாடுகளின் வணிகங்களையும் பாதிக்கும் எனவும், இதில் கனேடியப் பொருளாதாரம் கடுமையான மந்த நிலையைச் சந்திக்கும் அபாயம் உள்ளதாக வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். அமெரிக்கா - கனடா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, அமெரிக்கா, கனடாவின் 20 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருட்கள் மீது 50 சதவீத வரியை விதித்துள்ளது. ஜனவரி 1 முதல் அனைத்து சிற்றுந்து தயாரிப்புகள் மீதும் 50 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் ட்ரம்ப் எச்சரித்து ள்ளார்.

அதேநேரம், அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடியாக கனேடியப் பிரதமர் மார்க் கார்னி 700க்கும் மேற்பட்ட அமெரிக்கப் பொருட்கள் மீது 15, 25 மற்றும் 50 சதவீத அடிப்படையில் 20 பில்லியன் டொலர் மதிப்பிலான பழிவாங்கல் வரிகளை அறிவித்துள்ள நிலையில் இந்த வரிகள் எதிர்வரும் செப்டம்பர் 8 முதல் அமுலுக்கு வரவுள்ளன.அமெரிக்காவுடனான வர்த்தக மோதல் நீடித்து வரும் நிலையில் கனடாவில் உள்ளூர் உணவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கான தேவை கணிசமாக அதிகரித்துள்ளதாக உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. மளிகைக் கடைகளில் பொருட்களின் விலை அதிகரித்துள்ள போதிலும், கனடா முழுவதும் உள்ள நுகர்வோர்கள் தங்கள் நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கே முன்னுரிமை (5ம், 6ம் பக்கம் பார்க்க)

# தேர்தல்களை காலவரையின்றி தள்ளிப் போட "பெலவத்தை" தீவிரம்!

இலங்கையில் இப்போது தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியற் கட்சியும் தனித்தியங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. கடந்த இரண்டாண்டு க்குள் இந்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லலாம். ணில், சஜித், மகிந்த ஆகியோரின் தலைமையிலான கட்சிகள் அவ்வப் (9ம் பக்கம் பார்க்க)


THINKING OF
SELLING OR BUYING A HOME?
www.AgentSiva.com
Your neighborhood sales representative
PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!
RE/MAX
ACE EXPERIENCE THE DIFFERENCE REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED & OPERATED
we are ace
Siva Kandiah
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com
Piravien Siva
Sales Representative B.Comm.
Dir: 647-221-5220
piravien@gmail.com
MLS
23 Years Real Estate Experience
150 Consumers Rd #109, North York, ON M2J 1P9, Canada
Bus: 416-293-4500
• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY
Adelaide Ave E / Simcoe St
Oshawa $699,000
3+2 Beds • 2 Baths • 9 Rooms
high-demand rental area
Kingston Rd & Sheppard Ave E
Scarborough $710,000
3+2 Beds • 3 Baths • 8 Rooms
open living and dining area
Islington Ave / Steeles Ave W
Toronto $749,000
4 Beds • 2 Baths • 8 Rooms
Corner Condo Townhouse
Neilson Road & Sheppard
Scarborough $839,000
4+1 Beds • 3 Baths • 7+3 Rooms
Location, location, location!
Danforth and Dawes
Toronto $839,999
2+1 Beds • 2 Baths • 7 Rooms
Corner suite, unobstructed views
Williamson & Westney
Ajax $849,000
3 Beds • 3 Baths • 7 Rooms
Detached 2-storey home
Rogers and Dufferin St
Toronto $849,999
3 Beds • 2 Baths • 6+1 Rooms
fully renovated from top to bottom
Markham Rd & Lawrence Ave
Scarborough $999,000
3+3 Beds • 4 Baths • 6+5 Rooms
fully renovated bungalow
Harmony Road / Conlin Road
Oshawa $999,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Upgraded from top to bottom
Cameo St / Burkolder Dr
Pickering $999,900
3 Beds • 3 Baths • 7 Rooms
Newly built detached home
Hwy10 / Hwy 89
Shelburne $999,900
5 Beds • 5 Baths • 10 Rooms
Luxurious savile row model home
Markham/Steeles
Markham $999,999
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Fin.basement with sep.entrance
Markham Rd/ Lawrence Ave E
FOR LEASE
Scarborough $2,700
3 Beds • 1 Baths • 6 Rooms
Recently refreshed with new paint
Markham Rd & Sheppard Ave
FOR LEASE
Scarborough $2,250
1+1 Beds • 1 Bath • 5 Rooms
Open concept w/ natural sunlight
Simcoe St/ Windfields Farm Dr
FOR LEASE
Oshawa $1,500
1 Bed • 1 Bath • 3 Rooms
Basement with sep entrance
Markham & Denison
FOR LEASE
Markham $1,450
1 Bed • 1 Bath • 4 Rooms
Basement with sep entrance

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# கனடாவாழ் கருணையாளர்களின் கவனத்திற்கு!

என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங் களில் வாழும் குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந்துள்ளது. இதனால் இக்குழந்தை களின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ்வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டுமல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண்காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய குழந்தைகளின் புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# அரசுக்கு எதிராக தமிழ்கட்சிகள் உண்ணாவிரத போராட்டம்!

எதிர்வரும் 12 ஆம் திகதி அரசாங் கத்திற்கு எதிராக தமிழ் கட்சிகள் அடையாள உண்ணாவிரத போரா ட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள னர்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமை ப்பின் கலந்துரையாடல் கடந்த 31 ஆக 2026 திங்கட் கிழமை யாழ்ப் பாணம் இணுவில் பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும் போதே ஜனநாயக தமிழ்தேசிய கூட்டணியின் பங்காளி கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமசந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்

அரசாங்கம் பதவி ஏற்று 2 வருடங் கள் கடந்த போதிலும், தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதி களை நிறைவேற்றவில்லை என் றும் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, மாகாண சபை தேர்தல், புதிய அரசியலமைப்பு, போன்ற விடயங் களை நிறைவேற்றுவதாக தமிழ் மக்களுக்கு ஆணைகொடுத்து வந்த அரசாங்கம் எந்த விடயங் களையும் நிறைவேற்றவில்லை என்று குற்றஞ் சாட்டியதோடு, அரசாங்கத்திற்கு உணரத்துவதற் கும், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு ள்ளார்கள் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்தவும் ஒருநாள் அடை யாள உண்ணாவிரதத்தை சாவகச் சேரி பேருந்து நிலையத்தில் மேற் கொள்ளவதற்கு தீர்மானித்துள்ளது.

அத்துடன் இப்போராட்டத்திற்கு தமிழ் கட்சிகளின் இணைந்த அழைப்பாக, பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்திற்கு வலுச் சேர்க்குமாறு அழைப்பு விடுத்து ள்ளார்கள்.

இந்த போராட்டமானது, ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் அரசாங்கம் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களிடம் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து வாக்குகளை பெற்று இன்று 2 வருடங்கள் கழிந்த நிலையிலும் கொடுத்த வாக்குகள் நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, வலி வடக்கில் 3 பகுதி களாக சொந்த நிலத்தை விடுவிக்கு மாறு கோரி போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றனர். பலாலி விமான நிலையம் காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப் படாமல் தொடர்ந்தும் பின்னடிக்கப் பட்டு வருகின்றனர்.

இந்தியா வழங்கிய 600 மில்லியன் ரூபா டொலர்களை வழங்கிய போதும் வேலைகளை செய்வதற் கான உடன்படிக்கைகளை மேற் கொள்ளாது காலம் கடத்தி வரு கின்றனர். தேர்தல் காலத்தில் மாகாண சபை அதிகாரங்களை வழங்குவோம் என்றவர்கள், மாகாண சபை தேர்தலை நடத்து வதற்கு எள்ளளவும் விரும்பாத நிலை காணப்படுகிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் எவ்வித கரிசனையும் காட்டாது இருப் பதை கண்டித்தும், திட்டமிட்டு தமிழ் மக்கள் மீது திணிக்கும் தொல்லியல் துறை சார்ந்த விடய ங்களை கண்டிக்கும் முகமாகவும் எதிர்வரும் 12 ஆம் திகதிகாலை 7.30 மணியளவில் தமிழ் மக்கள் சார்ந்து தமிழ் அரசியல் கட்சிகள் அடையாள உண்ணாவிரத போரா ட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அழைப்பு விடுக்கின்றோம் என்றார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாக நாமலுக்கு அழைப்பு!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் முன்பாக இன்று வெள்ளிக்கிழமை (04) ஆஜராகுமாறு அழைக்கப் பட்டுள்ளார்.

குறித்த தினம் காலை 9.0–0 மணிக்கு ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு இலஞ்ச ஆணைக் குழு தனது கட்சிக்காரருக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்து ள்ளதாக நாமல் ராஜபக்ஷவின் சட்டத்தரணியான முதித்த ஆர். லொக்குமுதலி ஊடகங்களிடம் தெரி வித்தார். அத்துடன் நாமல் ராஜபக்ஷ இந்த அழைப்பாணை க்கு இணங்க குறித்த தினம் ஆணைக்குழுவில் முன்னிலை யாவார் என குறிப்பிட்ட அவர் கடந்த திங்கட்கிழமையன்று ஆணைக்குழுவின் முன்பாக ஆஜராகுமாறு முதலில் அழைக்கப் பட்டதாகவும் கூறினார். இருப் பினும் இந்த அழைப்பாணைக் கான காரணம் இன்னும் வெளி யிடப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தமிழகத்தில் 52 முக்கிய கோயில்களுக்கு தொலைபேசி கொண்டு செல்லத் தடை! விரைவில் ஆன்லைன் தரிசன டிக்கட்!



தமிழகம் முழுவதும் உள்ள 52 கோவில்களில் செப்டம்பர் (1) முதல் பக்தர்கள் தொலைப்பேசி எடுத்து செல்ல இந்து சமய அறநிலையத்துறை தடை விதித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதனால் கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ள பிரத்யேக பாதுகாப்பு அறையில் (கட்டணம் ரூ.5) வைத்து விட்டு கோவிலுக்குள் செல்ல வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து இந்து அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் தெரிவிக்கையில்: இன்று முதல், ஏற்கனவே உள்ள நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலும், திருக்கோவில்களில் பக்தர்கள் அமைதியான சூழலில் இறைவனை தரிசனம் செய்வதற்காகவும், தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள 52 முதுநிலைத் திருக்கோவில்களில் மட்டும் தொலைப்பேசி எடுத்துச் செல்வதற்கான தடை செயல்படுத்தப்பட்டுள்ளது. பழனி, திருச்செந்தூர், மதுரை மற்றும் ராமேஸ்வரம் ஆகிய திருக்கோயில்களில் தொலைப்பேசி தடை நடைமுறையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. திருக்கோயில்களில் இறைவனின் திருவுருவச் சிலைகளைப் புகைப்படம் எடுப்பது, காணொளி பதிவு செய்வது தொடர்ந்து நடைபெறுவதால், இந்தத் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்களது கமரா வசதியுடன் கூடிய தொலைப்பேசிகளை முடிந்தவரை தங்களது வாகனங்களிலோ அல்லது தங்கியிருக்கும் அறைகளிலோ வைத்து விட்டு வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், தொலைப்பேசிகளை திருக்கோவில்களில் பாதுகாப்பாக வைப்பதற்கான பிரத்யேக பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். புகைப்படம் எடுக்கும் வசதி இல்லாத சாதாரண செல்பேசிகளுக்கு இக்கட்டுப்பாடு பொருந்தாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நமது திருக்கோவில்களில் ஆரோக்கியமான, அமைதியான மற்றும் ஆன்மிகமான வழிபாட்டுச் சூழலை உருவாக்க பக்தர்கள் அனைவரின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. அனைவரும் ஒன்றிணைந்து, திருக்கோவில்களில் சிறப்பான வழிபாட்டுச் சூழலை உருவாக்கிடுவோம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அமைச்சர் ரமேஷ் கூறியுள்ள அவர்

தமிழக கோயில்களில் தரிசனம் செய்வதற்கான டிக்கெட் ஆன்லைனில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது'' என்று சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, அதிமுக எம்எல்ஏ கோ.அரி பேசும் போது, 'திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு திருத்தணி தொகுதியைச் சேர்ந்த உள்ளூர் பக்தர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் காலை, மாலை இரு வேளைகளிலும் தாளாக 2 மணி நேரம் சுவாமி தரிசனம் செய்து வந்தனர். கடந்த திமுக ஆட்சியில் 5 ஆண்டு காலம் அந்த சேவை நிறுத்தப்பட்டது.எனவே இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் உள்ளூர் மக்கள் நலன் கருதி காலை, மாலை இருவேளை செவ்வாய்க்கிழமை தோறும் முன்னுரிமை அடிப்படையில் சாமி தரிசனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.



இதற்கு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.ரமேஷ் அளித்த பதில்: கோயில்களில் உள்ளூர் மக்களை அனுமதிப்பது தொடர்பாக ஏற்கெனவே பல்வேறு கோரிக்கை வந்துள்ளன. திருத்தணி தொகுதி எம்எல்ஏவும் அது தொடர்பாக கோரிக்கை மனு அளித்துள்ளார். பல்வேறு கோயில்களில் முன்னுரிமை அளித்து தரிசனம் செய்ய அனுமதிக்க வேண்டும் என கோரிக்கைகள் வந்துள்ளன. கோயில்களில் பக்தர்கள் வரிசை மேலாண்மை செய்வதில் சட்ட சிக்கல்கள் உள்ளன. ஒரு கோயிலின் பக்தர்கள் கொள்திறன் 30 ஆயிரமாக இருக்கும்போது ஒரே நாளில் 50 ஆயிரம் பேர் வரும் நிலையில், தரிசன நேரம் அதிகமாகிறது. அப்போது வரிசை மேலாண்மை செய்வதிலும் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன.

திருத்தணி கோயிலில் உள்ளூர் பக்தர் அனுமதிப்பது தொடர்பாக ஏற்கெனவே அறங்காவலர் குழுக்களின் பரிந்துரையை கேட்டிருக்கிறோம். விரைவில் இணையதளம் மூலமாக தரிசன டிக்கெட் பெற மென்பொருள், இணையத்தளம், செயலி உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

அதில் உள்ளூர் மக்களுக்கு தரிசன வசதி எப்படி கொண்டு வருவது என ஆய்வு செய்து வருகிறோம். இந்த சேவை அமலுக்கு வரும்போது உள்ளூர் மக்கள் தரிசனத்துக்கான சேவை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று அவர் பதிலளித்தார்.



# அமெரிக்காவுடன் வர்த்தகப் போர்! கனடாவை எச்சரிக்கும் வல்லுனர்கள்!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடா மீது ஆரம்பித்துள்ள வர்த்தகப் போர் இரண்டு நாடுகளின் வணிகங்களையும் பாதிக்கும் எனவும், இதில் கனேடியப் பொருளாதாரம் கடுமையான மந்தநிலையைச் சந்திக்கும் அபாயம் உள்ளதாக வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். அமெரிக்கா – கனடா இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, அமெரிக்கா, கனடாவின் 20 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருட்கள் மீது 50 சதவீத வரியை விதித்துள்ளது. ஜனவரி 1 முதல் அனைத்து சிற்றுந்து தயாரிப்புகள் மீதும் 50 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார் .

அதேநேரம், அமெரிக்காவின் நடவடிக்கைக்குப் பதிலடியாக, கனேடியப் பிரதமர் மார்க் கார்னி 700க்கும் மேற்பட்ட அமெரிக்கப் பொருட்கள் மீது 15, 25 மற்றும் 50 சதவீத அடிப்படையில் 20 பில்லியன் டொலர் மதிப்பிலான பழிவாங்கல் வரிகளை அறிவித்துள்ள நிலையில் இந்த வரிகள் எதிர்வரும் செப்டம்பர் 8 முதல் அமுலுக்கு வரவுள்ளன.

இதற்கிடையில், அமெரிக்காவைக் காட்டிலும் கனடாவின் பொருளாதாரம் பத்தில் ஒரு பங்கு மட்டுமே உள்ளதாலும், தனது ஏற்றுமதியில் 70 சதவீதத்தை அமெரிக்காவிற்கே அனுப்புவதாலும் கனடா இந்த வர்த்தகப் போரால் அதிகம் பாதிக்கப்படக் கூடும். அதன்படி ஒன்ராறியோ, கியூபெக், பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் நியூ பிரன்சுவிக் மாகாணங்களைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர்.

இந்த வர்த்தகப் போரால் கனடாவில் 100,000க்கும் மேற்பட்ட வேலைகள் இழக்கப் படலாம் என சர்வதேச வர்த்தக ஆலோசகர்கள் அஞ்சுகின்றனர்.

இதேவேளை, கனடாவிற்கு எதிரான தனது அதிருப்தியை வெளிப்படுத்தும் விதமாக, ஒன்றாறியோ ஏரியை இனி அமெரிக்க அரசு 'அமெரிக்கா ஏரி என்று அழைக்கும் என டிரம்ப் அறிவித்துள்ளார். இதற்குப் பிரதமர் மார்க் கார்னி மற்றும் மனிட்டோபா மாகாணத்தின் முதல்வர் வாப் கினே ஆகியோர் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 22வது அரசியலமைப்புத் திருத்தம் :- தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படும்



22ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களையும் பரிசீலித்த பின்னர்இ அது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் 01 செப்டம்பர் 2026 கருத்துத் தெரிவித்த அவர் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமா என்பதை உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும் என குறிப்பிட்டார்.

இருப்பினும் தொடர்புடைய அரசியலமைப்புத் திருத்தம் குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு அப்பாற்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது எந்த வகையிலும் சாத்தியமில்லை என்று கூறிய அமைச்சர், மனுக்களைத் தாக்கல் செய்த அனைத்துத் தரப்பினரும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதன்படி இன்றிலிருந்து மூன்று வாரக் காலம் உயர் நீதிமன்றத்திற்கு அவகாசம் உள்ளதாகவும், அதனடிப்படையில் மனுக்கள் அனைத்தையும் பரிசீலித்த பின்னர் இறுதித் தீர்ப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இந்த மனுக்கள் அனைத்தையும் பரிசீலித்து பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டும் போதுமானதா அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்பும் தேவையா என்பதை உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும். எதிர்க்கட்சியோ அல்லது ஆளுங்கட்சியோ யாராவது கோரிக்கை விடுக்கிறார்கள் என்பதற்காக உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு அப்பாற்பட்டு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த யாராலும் முடியாது. அதை மனுத் தாக்கல் செய்த அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

தீர்ப்பைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இன்றிலிருந்து மூன்று வாரக் காலம் உயர் நீதிமன்றத்திற்கு உள்ளது. அதன் பிறகு பார்ப்போம். உயர் நீதிமன்றத்திடம் சர்வஜன வாக்கெடுப்பு கோரப்படுவதற்கும், தேசிய மக்கள் சக்தியாக ஜனாதிபதியின் தலைமையில் கூட்டங்களை நடத்துவதற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை என்றார்.

# வடமாகாண அபிவிருத்திக்கு இனவாதம் தடையா?




பலாலி சர்வதேச விமான நிலையத்தையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும் போக்குவரத்துக்கு மேம்படுத்துவதற்கு தேவையான உதவிகளை நன்கொடையாக வழங்க இந்தியா முன்வந்து அதற்கான நிதியை ஒதுக்கி, ஐந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் விடயம் இன்னமும் களத்தில் முன்னகர்வதாக இல்லை. கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கின்றது.

இதுவரை காலமும் போக்குவரத்து அமைச்சோடு துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அமைச்சுக்களையும் தன் கைவசம் வைத்திருந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவே இந்த விடயங்களை இனவாத நோக்கில் அணுகி முட்டுக்கட்டை போட்டுக் குழப்பி வருகிறார் என்று கூறப்பட்டு வந்தது. அதனை உறுதிப்படுத்துமாற் போல அவ்வப்போது அந்த மேம்படுத்தல் திட்டங்களுக்கு ஆப்படிக்கும் கருத்துக்களை தினாவெட்டாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க அடிக்கடி வெளியிட்டும் வந்தார்.

இதனால் எரிச்சல் அடைந்த இந்தியா இலங்கை ஜனாதிபதியிடம் இது குறித்து உத்தியோகப்பற்றற்ற முறையில் செய்த முறைப்பாட்டின் பின்புலத்தில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அமைச்சு பிமல் ரத்நாயக்க விடமிருந்து பறிக்கப்பட்டது.

அப்படி நடந்து ஒரு வருடமாகியும் இந்த இரண்டு திட்டங்களும் முன்னகர்வதாகத் தெரியவில்லை. இதோ திட்டம் ஆரம்பிக்கின்றது, அதோ நடைமுறைப்படுத்தப்படப் போகின்றது என்றெல்லாம் வியாக்கியானங்கள் கூறப்பட்டனவே தவிர விடயம் களத்தில் நடந்ததாக இல்லை.

இந்தச் சமயத்தில்தான் பலாலி சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் முக்கிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்: இந்திய நிதி உதவி அல்லது கடன் உதவிகள் கிடைத்தாலும், எந்தெந்த அபிவிருத்தித் திட்டங்களை, எப்போது மற்றும் எவ்வாறு முன்னெடுப்பது என்பதை இலங்கை அரசாங்கமே முடிவு செய்யும். பலாலி விமான நிலைய வளர்ச்சிக்கு இந்தியா ஓரளவு நிதி வழங்கியிருந்தாலும், அது முழுத் திட்டத்தையும் நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை. மீதித் தொகைக்குக் கடன் பெற வேண்டிய நிலை உருவாகும். முறையான திட்டமிடல் இன்றி கட்டப்பட்டு நஷ்டத்தைச் சந்தித்த மத்தள விமான நிலையத்தைப் போன்று நாட்டுக்குப் பொருளாதாரச் சுமையையோ அல்லது நஷ்டத்தையோ ஏற்படுத்தும் திட்டங்களை அரசாங்கம் அவசரப்பட்டு மேற்கொள்ளாது என அந்தச் சந்திப்பில் கூறியிருக்கின்றார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

இதன் அர்த்தம் என்ன? பலாலி சர்வதேச விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றை மேம்படுத்தும் திட்டங்களை அரசு முன்னெடுக்கப் போவதேயில்லை என்பது தானே...?

இவற்றிலிருந்து என்ன தெரிகின்றது? என்ன தெளிவாகின்றது? ஒட்டுமொத்தத்தில் இந்தியா நிதி உதவி அளிக்க முன்வந்தும் பலாலி சர்வதேச விமான நிலையத்தையும், காங்கேசன்துறை துறைமுகத்தையும் மேம்படுத்த இனவாத பௌத்தசிங்களத் தலைமைகள் இடமளிக்க மாட்டா என்பது தான் அது!

# வருங்காலத்தில் உண்மையை அறியாமல் எவரும் உயிரிழக்கக் கூடாது




வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் முறையான நம்பகமான ஆதாரங்கள் உள்ள போதிலும், அவற்றை அரச அதிகாரிகள் மறுப்பதை நாம் வலுவாக எதிர்க்கிறோம் என வலிந்து காணாமலாக்கப்படலகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழுவின் உறுப்பினர் அனா லொரெனா டெல்கடில்லோ பேர்ஸ் தெரிவித்தார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளினால் 30 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மாநாட்டில் அவர் ஆற்றிய சிறப்புரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். உண்மை, நீதி, மீள்நிகழாமைக்கான பயணத்தில் பெரும் எண்ணிக்கையான தாய்மார் பதிலை அறியாமலேயே உயிரிழந்து விட்டனர். இனிவருங்காலங்களில் உண்மையை அறியாமல் எவரும் உயிரிழக்கக்கூடாது.

வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் அரசாங்கம் முறையான சுயாதீன விசாரணைகளை முன்னெடுத்து, உண்மை மற்றும் நீதியை நிலைநாட்ட வேண்டும். அச்செயன்முறைக்கு அவசியமான தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பு க்களை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்றார்.

# முறிந்த ஒப்பந்தத்தை மீண்டும் உயிர்ப்பிக்க ஈரான் தயார் - ஜனாதிபதி

கடந்த ஜீன் மாதம் கையெழுத்தான இடைக்கால ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்கா தனது கடமைகளை மீண்டும் நிறைவேற்றத் தொடங்கினால், தெஹ்ரானும் உடனடியாக அதற்கு இணங்கச் செயல்படும் என்று ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் 01 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

போர் யாருடைய நலனுக்கும் உகந்தது அல்ல என்றும், வொஷிங்டனுடனான மோதலில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்குத் தான் இன்னும் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



ஜீலை மாத இறுதியில் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான மோதலில் நேரடித் தாக்குதல்கள் பரிமாறப்பட்டதைத் தொடர்ந்து அதாவது அமெரிக்கா லாரக் தீவைத் தாக்கியதும், அதைத் தொடர்ந்து ஜோர்டானில் உள்ள இரண்டு அமெரிக்க விமானப்படைத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதும் நிகழ்ந்த பின்னர் பிஷ்கெக்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் அவர் இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

பெப்ரவரி 28 அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுடன் தொடங்கிய போரை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஜீன் மாதத்தில் தெஹ்ரானுக்கும் வொஷிங்டனுக்கும் இடையே கையெழுத்தான இடைக்கால ஒப்பந்தத்தையே அவர் இதன் போது சுட்டிக்காட்டிப் பேசினார். அந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் அது விரைவிலேயே முறிந்துபோனது.

உலகளாவிய எண்ணெய் விநியோகத்திற்கு மிக முக்கியமான நீர்வழியான ஹார்முஸ் நீரிணை வழியாகத் தடையற்ற போக்குவரத்தை அனுமதிக்க வேண்டுமானால், வொஷிங்டன் அந்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று தெஹ்ரான் மீண்டும் மீண்டும் கூறி வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க செயலாளர் டான் டிரிஸ்கோல் தனது பதவியிலிருந்து விலகுவதற்கான இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் சமர்ப்பித்துள்ளார். இராணுவத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ட்ரம்புடன் கலந்துரை யாடிய பின்னரே டிரிஸ்கோல் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

# கனடிய தயாரிப்புகளுக்கு அதிகரிக்கும் வரவேற்பு!




அமெரிக்காவுடனான வர்த்தக மோதல் நீடித்து வரும் நிலையில் கனடாவில் உள்ளூர் உணவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுக்கான தேவை கணிசமாக அதிகரித்துள்ளதாக உற்பத்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. மளிகைக் கடைகளில் பொருட்களின் விலை அதிகரித்துள்ள போதிலும், கனடா முழுவதும் உள்ள நுகர்வோர்கள் தங்கள் நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கே முன்னுரிமை அளித்துத் தேடிச் சென்று வாங்கி வருகின்றனர்.

அமெரிக்காவின் வர்த்தக வரிகளால் தங்களது நிறுவனம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் ஒன்டாரியோவின் போமன்வில் பகுதியில் பாய்ச்ச்மென்ட் காகிதம் விநியோகிக்கும் 'ஏவென்கோ லிமிடெட்' நிறுவனத்தின் தலைவர் கேத்லீன் சேப்மேன் தெரிவித்தார்.

சுமார் 40 சதவீத வாடிக்கையாளர்களை அமெரிக்காவில் கொண்டுள்ள இந்நிறுவனம், பிரான்ஸிலிருந்து மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதால் ஆரம்பத்தில் ஐரோப்பிய பொருட்கள் மீதான அமெரிக்க வரிகளால் பாதிக்கப்பட்டது.

தற்போது அப்பொருட்கள் கனடாவில் தயாரிக்கப்பட்டு மாற்றியமைக்கப்படுவதால், மேலும் 50 சதவீத கூடுதல் வரியை எதிர கொண்டுள்ளது.

எனினும், கனடிய மக்கள் நேரடியாகத் தங்கள் நிறுவனத்தைத் தொடர்புகொண்டு ஆதரவு தெரிவிப்பதுடன், ஆன்லைன் மூலமாக நேரடியாக ஆர்டர்களையும் வழங்கி வருகின்றனர். இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளில் வெறும் 20 ஆக இருந்த நேரடி வாடிக்கையாளர் ஆர்டர்களின் எண்ணிக்கை, புதிய அமெரிக்க வரிகள் அமலுக்கு வந்த ஒரே வாரத்தில் நூற்றுக்கணக்கில் உயர்ந்துள்ளது.

நுகர்வோர்கள் உள்நாட்டுப் பொருட்களை கொள்வனவு விரைவாக மாறி வரும் நிலையில், சில்லறை விற்பனைக் கடைகள் தங்களது விற்பனை அலமாரிகளில் கனடிய தயாரிப்புகளுக்குப் போதிய இட ஒதுக்கீட்டை வழங்குவதில் இன்னும் தாமதம் காட்டி வருவதாக சேப்மேன் சுட்டிக் காட்டியுள்ளார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011


Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# எப்படிப் போகிறது உங்கள் நல்லூர்த் திருவிழா? கேள்விக்கு கம்பவாருதியின் பதில்!



கேள்வி: எப்படிப் போகிறது உங்கள் நல்லூர்த் திருவிழா?

பதில்: அதற்கென்ன குறை? ஓகோ என்று நடந்து கொண்டிருக்கிறது. சண்டைக் காலத்தில் ஊர்த்திருவிழாவாக இருந்தது. சண்டை முடிந்ததும் நாட்டுத் திருவிழாவாக மாறி, யுடியூப் களின் வருகையோடு இன்று அது உலகத் திருவிழாவாக மாறி விட்டது.

எப்படித்தான் நல்லூர்த் திருவிழா மட்டும் இத்தனை பெரிய கூட்டத்தை ஈர்க்கி றதோ தெரியவில்லை. கட்டுப்பாடுகளை வெறுக்கும் நம் மக்கள் கூட நல்லூர் நிர்வாகம் எத்தனை கட்டுப்பாடுகளை விதித்தாலும் அது பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் அக்கட்டுப்பாடுகளுக்கு உடன்பட்டு, கோயிலில் வந்து குவிந்து கொண்டிருப்பது ஓர் ஆச்சரியமே.

யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் தலைமைப் பெருமையாக இன்று நல்லூர்க் கோயில் தான் இடம் பிடித்திருக்கிறது என்றால் அதில் மிகையில்லை. கோயில் திரு விழாக்களின் போது புதிய எஜமானரால் முன்பை விட பல புதுமைகள் புகுத்தப் படுகின்றன.

நல்லூர் தேவஸ்தானம் எதைச் செய்தா லும், அந்தச் செயல் எல்லா ஆலயங்களி னதும் அடையாளச் செயலாக மாறுவது யாழில் வழக்கம். வில்மண்டபம், தேர் முட்டி எனப் பலவற்றை இதற்கான உதாரணங்களாய்ச் சொல்லலாம்.

அந்த வகையில் அண்மைக் காலத்தில் நல்லூரால் பிரபலமாகியிருக்கும் கட்டி யம் கூறும் புதிய முறை, இன்று நம் நாட்டைக் கடந்து வெளிநாடுகளிலும் பிரபல்யமாகி இருக்கிறது. இங்கு வந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதா ராமனே அது பற்றிச் சொல்லி வியந் ததை மறக்கமுடியாது.

புதிய எஜமானரான சயந்தன் மாப்பாண முதலியார் அவர்கள், தன் தந்தையார் குமாரதாஸ மாப்பாணமுதலியார் போலவே தன்னைப் பின்தள்ளிக் கொண்டு கோயிலை முன்னெடுத்துச் செல்கிறார். குலப்பெருமை என்பது இது தான் போலும்.

முன்பு குமாரதாஸ மாப்பாணமுதலியார், சயந்தனைக் குழந்தைப் பருவத்திலிரு ந்து இப்பதவிக்காய்த் தயார்ப்படுத்தி யதைப் பார்த்திருக்கிறேன். இப்போது சயந்தனும் தனது மகனை அதேபோலத் தயார் செய்து வருவதைக்காண மனம் மகிழ்கிறது.

இவர்களின் நடைமுறையைக் காண, பொது நிர்வாகத்தை விட தனி நிர்வாகம் தான் சிறந்ததோ என்று எண் ணத் தோன்றுகிறது. பொது நிர்வாகத் தில் நன்மை வந்தால் அனைவரும் பொறுப்பேற்க முன் வருவார்கள். தீமை வந்தால் ஆளையாள் கைகாட்டி குற்றம் சாட்ட முனைவார்கள்.

தனி நிர்வாகத்தில் அப்படியில்லை. நன்மையோ, தீமையோ அவரவரே பொறுப்பேற்க வேண்டி வருவதால் நிர்வாகிகளிடம் அக்கறையும் பொறு ப்புணர்ச்சியும் அதிகரிப்பதைக் காண முடிகிறது. இதை மற்றைய ஆலயங் களும் பின்பற்றுவது நல்லது என்றே தோன்றுகிறது.

ஒரு கோயிலைக் கட்டி சிறிய அளவில் அதன் திருவிழாவை 10 நாட்கள் நடத்த நான் படுகிறபாடு எனக்குத்தான் தெரியும். இத்தனை பெரிய கோயிலைக் கட்டி, இலட்சக்கணக்கான மக்களை ஈர்த்து, ஒழுங்கு தவறாமல் ஒரு திருவிழாவை நடத்துவதென்பது நினைத்தும் பார்க்க முடியாத விடயம் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை.

எஜமானின் கட்டளைக்குத் தொண்டர் களும், அந்தணர்களும் மட்டுமல்ல, முருகனும் கட்டுப்பட்டு நடப்பதாய்த் தோன்றுகிறது. நிர்வாகக் கட்டுப்பாட் டைப் பற்றி அறிய நம் உயர் அதிகாரி கள் நல்லூர் நிர்வாகத்திடம் பாடம் கேட்கவேண்டும்.



தொண்டர்களுக்கான யூனிபோம். திரு விழாவில் அறிமுகப்படுத்தப்படும் புதிய புதிய வாத்தியங்கள், சுவாமி வீதியுலாவின் போது நடத்தப்படும் கலைநிகழ்ச்சிகள், நாதஸ்வரத்தோடு போட்டி போடும் பிரசன்னாக் குருக்களின் குரலிசை, தீர்த்தக் கேணியில் அறிமுகப்படுத்தி யிருக்கும் அஷ்டதிக்குப் பாலகர்கள், தீப்பந்த விளையாட்டு என திருவிழா ஜேஜே என்று புதுமை பொங்க நடந்து கொண்டிருக்கிறது. அறிமுகப்படுத்தப் பட்ட புதுமைகள் பக்தர்களைக் கவர் கின்றன. கிட்டத்தட்ட கண்டி பெரஹரா வோடு போட்டிபோடும் தகுதி பெற்றிரு க்கிறது நல்லூர்த் திருவிழா.


கைச்சோறு சாப்பிட்டுப் பழகியவனுக்குக் கடைச்சோறு கசக்கும் என்பார்கள். என் நிலையும் அது தான். குமாரதாஸ மாப்பாணமுதலியார் நடாத்திய அமைதி யான நல்லூர்த் திருவிழாவையே பார்த் துப் பழகிய என்னை, இந்த பரபரப்பான திருவிழா கொஞ்சம் ஈர்க்க மறுக்கிறது. அஃதுஎனது குறை தானோ என்னவோ?

நல்லூரில், சாதாரண நாட்களில் வெளி வீதி சுற்றி வர முடியாத குறையைப் பலரும் பேசுகிறார்கள். அது எஜமான் காதுகளுக்குச் செல்கிறதோ அறியேன். சிலர் தங்கக் கோபுரத்தின் பாதுகாப்புக் காகத் தான் கட்டுப்பாடு என்கிறார்கள்.

அப்படியிருக்காதென்றே எனக்குத் தோன்றுகிறது. பக்தர்களை ஈர்க்கத் தான் தங்கக் கோபுரத்தைக் கட்டியிருப்பார்கள். தங்கக் கோபுரத்திற்காக ஒரு நாளும் பக்தர்களைக் கட்டிப் போட நல்லூர் நிர்வாகம் நினைக்காதென்பது உறுதி.

வேறு சிலர், வரும் சில பக்தர்களின் ஒழுங்கீனத்தால்த் தான் இத்தகைய கட்டுப்பாடு என்கிறார்கள். அது தான் காரணம் என்றால், அத்தகைய சிறிய அளவான குழப்படிக்காரர்களுக்காக பெரிய அளவான பக்தர்களை மனம் நோகச் செய்வது பொருத்தமாய்ப்பட வில்லை.

எஜமான் மனமிரங்கி பக்தர்கள் முரு கனை அன்றாடம் வலம் வந்து வழிபட ஆவன செய்யவேண்டுமென, இறை ஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அவர் களின் வழக்கப்படியே அவர்கள் இது பற்றி முருகனிடமே ஒருதரம் கேட்டுப் பார்ப்பது நல்லது என்று தோன்றுகிறது.

இன்று $200,000 வரை ஒரு புதிய வீட்டின் மீது மிச்சப்படுத்திடுங்கள் நாளை அது நிறைய குடும்பங்களாகவும் நிறைய வீடுகளாகவும் பெருகும்



புதிய வீட்டின் மீது $200,000 வரையிலும் எவ்வாறு மிச்சப்படுத்துவது என்பதை பின்வரும்இணையப் பக்கத்தில் அறிந்துகொள்ளுங்கள்:

ontario.ca/MoreHomesFaster

Ontario

ஒன்ராறியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

# ஐ.நா.மனிதஉரிமைகள் பேரவையின் 63வது அமர்வுக்கு இலங்கை அரசாங்கத்தின் இராஜதந்திரக் குழு ஜெனிவா பயணம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் உயர் மட்ட இராஜ தந்திரக் குழுவினர் சனிக்கிழமை ஜெனீவா நோக்கிப் பயணமாகவுள்ளனர்.

இக் கூட்டத்தொடரின் போது இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரகத்தின் எழுத்துமூலமான புதுப்பிக்கப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து உறுப்பு நாடுகளின் பங்களிப்புடன் பொது விவாதமும் இடம் பெறவுள்ளது.



இந்த சர்வதேச அவதானிப்பிற்கு மத்தியில், நாட்டின் தற்போதைய நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகள் குறித்த விசேட அறிக்கைகளை ஜெனீவா தளத்தில் சமர்ப்பிக்க இலங்கைத் தூதுக்குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

சர்வதேசத்தின் கடுமையான அவதானிப்பிற்கு உள்ளாகியுள்ள யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் உள்ளிட்ட உணர்வுபூர்வமான பொறுப்புக்கூறல் விடயங்களை முறையாகக் கையாள்வது குறித்து வெளிவிவகார அமைச்சு மட்டத்தில் விரிவான ஆலோசனைகள் இடம் பெற்றுள்ளன.

ஜெனீவா அமர்வுகளுக்கு முன்னதாக சர்வதேச சமூகத்தின் கரிசனைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், நீண்டகாலமாகக் கோரப்பட்டு வரும் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்தல், ஒத்தி வைக்கப்பட்டுள்ள மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான உத்தியோகபூர்வ திகதியை உறுதிப்படுத்தல் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் மூலம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது போன்ற உள்நாட்டு நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது.

மேலும், பொறுப்புக்கூறலை உறுதி செய்ய புதிய நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில், குறிப்பாக மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பாதுகாப்புத் துறை, சட்ட அமுலாக்கம் சார்ந்த சர்வதேச விமர்சனங்களின் தொடர்ச்சியாகவே தற்போதைய நகர்வுகள் பார்க்கப்படுகின்றன.

எனினும் கடந்த கால வடுக்களுக்கு நீதி வழங்குதல் மற்றும் சித்திர வதைகள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் தொடர் அழுத்தங்கள் நிலவியபோதிலும், இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் எந்தவொரு வெளிநாட்டு அல்லது சர்வதேச தலையீடுகளுடனான இணைந்த விசாரணைப் பொறிமுறையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

சர்வதேசத் தலையீடு என்ற எல்லை மீறலை அனுமதிக்க முடியாது என்பதில் உறுதியாக இருக்கும் அதேவேளை, நம்பகமான உள்நாட்டுப் பொறிமுறையின் மூலமே நாட்டின் நல்லிணக்கத்தையும் நீதியையும் நிலைநிறுத்த முடியும் என வெளிவிவகார அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நிதியுதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சரிபார்க்கும் நோக்கில், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இம் மாதம் இறுதியில் நாட்டிற்கு செல்லவுள்ளது.

இது சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் தொடர்புடைய வகையில் மேற்கொள்ளும் ஏழாவது மதிப்பீடாகும். அதனை நிறைவு செய்ததன் பின்னர், அதன் தவணையாக மேலும் சுமார் 330 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது.

இதுவரை சர்வதேச நாணய நிதியம் நாட்டிற்கு வழங்கியுள்ள நிதியுதவித் திட்டத்தின் கீழ், இலங்கை ஆறு மதிப்பீடுகளை நிறைவு செய்துள்ளதுடன், அதனடிப்படையில் நாட்டிற்கு விடுவிக்கப்பட்டுள்ள மொத்த நிதி சுமார் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.


SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

# தேர்தல்களை காலவரையின்றி தள்ளிப் போட "பெலவத்தை" தீவிரம்!

கட்டுரையாளர்:-
பனங்காட்டான்

அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார, இந்திய வெளியுறவுச் செயலாளர், இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோரை தமிழ் பேசும் கட்சிகளின் பேரவை சந்தித்தன. இதில் முக்கியமாக பங்கு பற்றியிருக்க வேண்டிய தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஏன் பங்கு பற்றவில்லையென்ற கேள்வி பலர் மத்தியிலும் பேசப்படுகிறது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட பதில் தலைவருடன் தொடர்பாடலில் இல்லையென்றும் கட்சியின் உள்மட்டத்தில் சொல்லப்படுகிறது.

கட்சியின் செயற்பாடுகள் பற்றியோ, கட்சியின் எம்.பிக்களின் நடவடிக்கைகள் பற்றியோ பொதுவெளியில் பேசப்படுபவைகள், ஊடகங்களில் வரும் விமர்சனங்களை திரு.சிவஞானம் கேட்பதோ, வாசிப்பதோ இல்லையென்றும் சில முக்கியஸ்தர்கள் கருது கின்றனர்.

முன்னைய தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்று இவரும் கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டு இயங்குவாரானால் தமிழரசுக் கட்சி யிலிருந்து இன்னொரு கட்சி பிறப்பெடுக்கும் காலம் நெருங்கி வருவதை எவராலும் தடுக்க முடியாது போகலாம்.

இயங்காதிருக்கும் இன்னொரு தமிழ் கட்சியின் பெயரை தமிழரசுக் கட்சியின் ஒரு பிரிவினர் கொள்முதல் செய்துவிட்டனர் என்றும், தற்போதைய தமிழரசு எம்.பி. ஒருவரின் தலைமையில் இதனை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம் பெறுவதாகவும் கொழும்பிலுள்ள சிங்கள கட்சிகள் மத்தியில் பேசப்படுகிறது.

இலங்கையில் இப்போது தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியற் கட்சியும் தனித்தியங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. கடந்த இரண்டாண்டுக்குள் இந்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லலாம்.

ரணில், சஜித், மகிந்த ஆகியோரின் தலைமையிலான கட்சிகள் அவ்வப்போது சேர்ந்த இயங்குவது போன்று தோற்றம் காட்டப்பட்டாலும் அது முடியாததாகவுள்ளது. திடீரென்று பொதுஜன பெரமுன தங்களின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச என்றும், அவரே அடுத்த ஜனாதிபதி என்றும் அறிவிப்பதை மற்றைய இரண்டு கட்சிகளாலும் ஏற்க முடியவில்லை.

இந்த மூன்று கட்சிகளுக்குள்ளும் தமக்கே அதிகபட்ச எம்.பிக்கள் இருப்பதால் தாமே ஜனாதிபதி வேட்பாளருக்கு தகுதியானவர் அல்லது வெற்றி பெறு வாய்ப்புள்ளவரென சஜித் பிரேமதாச நம்புகிறார். சஜித்தையும் நாமலையும் சரித்து விட்டு இறுதிக் காலத்தில் தாம் மீண்டும் ஜனாதிபதியாகலாம் என்ற கனவுலகில் ரணில் சஞ்சரிக்கிறார். பண்டாரநாயக்கக்களால் உருவாக்கப்பட்ட சிறீலங்கா சுதந்திர கட்சியைப் பற்றி எவருக்கும் அக்கறையில்லை.

தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் நிலைவரமும் ஏறத்தாழ சிங்களக் கட்சிகளைப் போன்றது தான். அண்மையில் தலா இரண்டு தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் கட்சிகளின் மொத்தம் ஆறு இணைந்து ஒரு பேரவையை உருவாக்கின. ஒரு வாரத்துக்குள் சடபுடவென ஜனாதிபதி அநுர குமர, அப்போது கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய வெளியுறச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இந்தியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரைச் சந்தித்து தமிழ் பேசும் மக்களின் நிகழ்கால அரசியல் நிலைவரங்களையிட்டு உரையாடின.

அடுத்த சில நாட்களில் நாடாளுமன்ற வளாகத்துள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தைச் சந்தித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ராவுப் ஹக்கிம் புதிய தமிழ் பேரவையில் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தார். உத்தியோகபூர்வ அழைப்பு கிடைத்தால் பரிசீலிக்கலாமென அவர் பதிலளித்தார். அத்துடன் கதை முடிந்தது. தமிழரசு கட்சியின் பதில் தலைவரும், பதில் செயலாளரும் கஜேந்திரகுமாரை சேர்த்துக் கொள்வதில் விருப்பமின்மை காட்டியதால் இவ்விடயம் கிடப்புக்குள் போடப்பட்டது.

தனித்தும் இயங்க முடியாது, கூட்டாகவும் பயணிக்க முடியாது என்ற நிலை தமிழர் தரப்பு, சிங்கள தரப்பு .ரண்டுக்கும் ஏற்பட்டிருப்பது பரிதாபத்துக்குரியது. கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டது போன்று இதுவே தேசிய மக்கள் சக்தி அரசுக்கான போனஸ்.

மாகாண சபை தேர்தல், புதிய அரசியலமைப்பு என்பவை கானல் நீர் என்று இப்பத்தியில் பல தடவை குறிப்பிடப்பட்டது. இப்போதைக்கு எந்த ஒரு தேர்தலும் இடம் பெற மாட்டாது என்ற சந்தேகம் அநேகமாக சகல அரசியல் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ளது. 43வது பிரிகேட் என்ற பெயரைக் கொண்ட அமைப்பின் தலைவரான முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க இதனை சில நாட்களுக்கு முன்னர் பகிரங்கமாக கூறியுள்ளார். 22வது அரசியல் சட்டத் திருத்தம் ஊடாக சகல தேர்தல்களையும் காலவரையின்றி பின்போட பெலவத்தை (ஜே.வி.பி.யின் தலைமை அலுவலகம்) தீவிரமாக செயற்படுவதாக இவர் கூறியுள்ளார். ஜனதா மித்துரோ, சிஹல உறுமய, ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றுடன் இணைந்திருந்த இவர் சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கட்சிகளில் பங்கேற்று பல அமைச்சர் பதவிகளையும் வகித்தவர்.




1980களில் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவராகவிருந்த சம்பிக்க ரணவக்க ஜே.வி.பி.யின் மாணவர் அமைப்பில் முக்கியஸ்தராகவிருந்து 1988 மற்றும் 1991களில் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டவர். பாம்பின் கால் பாம்பு அறியும் என்பர். ஜே.வி.பி.யின் அரசியல் செயற்பாடு பற்றி அறிந்து கொள்ளக் கூடிய ஒருவராக இவர் இருப்பதால் இவரது கருத்து நிராகரிக்கப்பட முடியாதது.

தமிழர் தரப்பை இனி பார்க்க வேண்டும். பலவீனமான தமிழரசுக் கட்சியென்று கடந்த வாரம் இப்பத்தியில் தலைப்பிடப்பட்டிருந்தது ஞாபகம் இருக்கலாம். இதனைப் படித்த கிழக்கு மாகாண பட்டிருப்புத் தொகுதியின் மண்டூர்வாசியான தமிழரசுக் கட்சி பிரமுகர் ஒருவர் இது தொடர்பில் என்னுடன் உரையாடினார். தமிழரசுக் கட்சி பலவீனமடைந்துள்ளது என்று சொல்வதை விட பிளவுபட்டு சிதறிப் போய் யார் தலைவர், கட்சியை வழி நடத்துபவர் யார் என்று தெரியாது அழிந்து கொண்டிருக்கிறது என்று பல உள்வீட்டு விடயங்களை அக்கு வேறு ஆணிவேறாக முன்வைத்தார்.

தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் யார் என்ற கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார். சுமந்திரன் – சிறிதரன் பகைமை, பொதுவெளியில் பகிரங்கமாக மோதுதல் போன்றவைகளை நிரைப்படுத்திக் கூறினார். அநுர அரசு முன்மொழிந்துள்ள புதிய நீதிமன்ற சட்டம் பற்றி சிவஞானம் சிறிதரன் கருத்து வெளியிடுகையில் தமிழரசுக் கட்சி இது பற்றிய இறுதி நிலைப்பாட்டை நீதிமன்றத் தீர்மானத்தின் பின்னரே எடுக்கும் என்று சொல்லியிருந்தார்.

மறுநாள் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் விடுத்த அறிக்கை சிறிதரனின் கூற்றை மறுதலித்தது. நீதித்துறை சட்ட மாற்றங்கள் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு முடிவு எடுத்திருப்பதாக இவர் தெரிவித்தார். சிறிதரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். நாடாளுமன்ற குழுத்தலைவராக முன்னர் இருந்தவர். கட்சியின் தலைவர் போட்டியில் அமோக வாக்குகள் பெற்று வெற்றி பெற்று தலைவரானவர். ஆனால், சுமந்திரன் பொதுத்தேர்தலில் மக்களாலும் கட்சித் தலைவர் போட்டியில் உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டவர். பதில் செயலாளர் பதவி மட்டக்களப்பில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் எவ்வாறு வழங்கப்பட்டது என்பதற்கு தனிக்கதை உண்டு என்றும் மண்டூர் பிரமுகர் தெரிவித்தார்.

இவர் குறிப்பிட்டது போல சுமந்திரனும் சிறிதரனும் தங்களுக்குள் அடிபட்டுக் கொண்டு கட்சியை அழித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களை விட மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் இன்னொரு வழியில் தம்போக்கில் செயற்படுகிறார். வெளிநாட்டுத் தூதுவர்களை இவர் சந்தித்து உரையாடும் படங்கள் ஊடகங்களில் வருகின்றன. இச் சந்திப்புகளுக்குச் செல்வதற்கு முன்னர் கட்சித் தலைமையிடம் அனுமதி பெறப்படுவதில்லையென்று சொல்லப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியல் நிலைமை பற்றி இவர் எடுத்துக் கூறித் தான் தூதுவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்றில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் புகழுக்காக தம்போக்கில்



செயற்பட்டுக் கொண்டிருப்பது கட்சியையே பாதிக்கிறது.

இது தொடர்பாக சில கட்சிப் பிரமுகர்கள் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் கேட்டபோது உள்ளிருக்கும் ஒவ்வொருவரும் கட்சியை நாசமாக்கி விட்டுப் போவதாக கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்களென ஆவேசமும் ஆதங்கமும் கலந்தவாறு கூறியதாக தெரிய வந்துள்ளது.

கொழும்புப் பத்திரிகையொன்று அண்மையில் அதன் அரசியல் கட்டுரை ஒன்றில் திரு. சி.வி.கே. சிவஞானம் தொடர்பாக ஒரு கருத்தை குறிப்பிட்டிருந்தது. இவரையும் படிப்படியாக சுமந்திரன் ஓரங்கட்டிவிட்டாரா என்ற கேள்வி இங்கு முன்வைக்கப்பட்டிருந்தது. அல்லது இவர் தாமாகவே ஒதுங்கிப் போகிறாரா என்ற கருத்தும் கட்சிக்குள்ளேயும் வெளியேயும் ஓங்கி வருகிறது.

தந்தை செல்வா இப்போது இருந்தாலும் தமிழரசுக் கட்சியின் இன்றைய நெருக்கடியை அவராலும் தீர்த்து வைக்க முடியாதென்பதே கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் நிலவும் பொதுவான கருத்து.

.

# 15வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள். அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

15 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

27 ஆகஸ்ட் 2026 முதல் 04 செப்டம்பர் 2026 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 03 செப்டம்பர் 2026 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 08 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 05 செப்டம்பர் 2026 சனிக்கிழமையாகும்.. அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்



### திருமதி சத்தியபாமா கௌரி குகன்

ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களது நினைவழியாத நினைவு நாள் 28 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சத்தியபாமா கௌரி குகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 36வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 36வது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2026 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 32வது 6வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 32வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 09 செப்டம்பர் 2026 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



16 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி வைலட் (Violet) வைத்தீஸ்பரன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 ஆகஸ்ட் 2026 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகள் தமது பிள்ளைகளுடன் இணைந்து நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியில் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். வாழ்க!



21 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பாலகுமார் சடாச்சரசுந்தரம் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 ஆகஸ்ட் 2026 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி கீர்த்தனா செல்வராஜா அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி கீர்த்தனா செல்வராஜா அவர்கள் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 ஆகஸ்ட் 2026 வெள்ளிக்கிழமை ஹட்டன் நுவரெலியாவைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சத்தியபாமா கௌரிகுகன் அவர்களது நினைவழியாத நினைவு நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 ஆகஸ்ட் 2026 சனிக்கிழமை இடம்பெற்ற இனிய நன்நாளுக்காக 01 செப்டம்பர் 2026 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவசங்கர் சுமதி இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



03 செப்டம்பர் 2026 வியாழக்கிழமை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது 5வது ஆண்டு நிரனவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



04 செப்டம்பர் 2026 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 15வது இனியப பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




# காணாமல் ஆக்கப்பட்டவருக்கு நீதி?




ஒரு மருத்துவர் சொன்ன கதை இது. ஒரு முதியவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் அனேகமாக உயிர் பிழைப்பது கடினம் என்பது மருத்துவர்களின் முடிவு. இது அவருக்கு அருகே நின்ற அவருடைய முதிய மனைவிக்கும் சொல்லப்பட்டது. அப்பொழுது மனைவி அந்த மருத்துவரிடம் கேட்டார்.

எனக்கு ஒரு உதவி செய்யுங்கள். எனது கணவரை எனது மாவட்ட ஆஸ்பத்திரிக்கு மாற்றி விடுங்கள் என்று. மருத்துவர் கேட்டார், ஏன் என்று. அங்கிருந்து எனது கிராமம் கிட்டவாக இருக்கிறது. இவர் இறந்தால் இவர் உடலை அங்கே கொண்டு போக செலவு குறைவாக இருக்கும். யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு போவது என்றால் செலவு அதிகமாக இருக்கும். என்னிடம் அந்த அளவுக்குக் காசு இல்லை என்று.

மருத்துவர் அந்த முதிய தாயின் குடும்ப நிலை தொடர்பாக விசாரித்திருக்கிறார். எனக்கு ஒரு பிள்ளை தான். அவர் காணாமல் ஆக்கப்பட்டு விட்டார். இப்பொழுது நானும் இவரும் தான் தனிய இருக்கிறோம். துணைக்கு இரண்டு நாய்கள் உண்டு. இவர் இருக்கும் வரை அவர் படுக்கையிலே கிடந்தாலும் கூட அவரைப் பராமரிப்பதன் மூலம் நான் தனிமையைப் போக்குவேன். இவரும் இல்லையென்றால் நானும் இரண்டு நாய்களும் தான் என்று அந்த முதிய தாய் கூறியிருக்கிறார்.

அந்தப் அம்மா அநேகமாக இப்பொழுது போராடிக் கொண்டிருக்கும் அன்னையர் மத்தியில் நிற்பவராகத் தெரியவில்லை. ஏனென்றால் போராட்டங்களுக்காக பொதுவெளிக்கு வந்தால் அங்கே அவருடைய வீட்டில் அவருடைய கணவர் இரண்டு நாய்களோடு தனித்து விடப்பட்டு விடுவார். அவருடைய கணவரைப் பராமரிப்பதற்கு அவர் அங்கே இருக்க வேண்டும். இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஒரு பிள்ளையின் தாயினுடைய கதை.

இவ்வாறு பிள்ளைகளைப் பறிகொடுத்த அம்மாக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தந்தை செல்வா கலையரங்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கிறார்கள். இம்முறை அதனை அவர்கள் ஒரு பெரிய அனைத்துலக மாநாடாக ஒழுங்குப்படுத்தியிருக்கிறார்கள். வெளிநாடுகளில் இருந்தும் பிரதிநிதிகள் வருகிறார்கள். குறிப்பாக அனைத்துலக பொது அமைப்புகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் சிலர் வர இருப்பதாக தகவல். உள்ளூர் பேச்சாளர்களும் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

இன்று காலை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்களை தாங்கிய ஊர்தி ஒன்று ஊர்வலமாகச் சென்று மாநாட்டு மண்டபத்தை அடையும்.பின் மாநாடு ஆரம்பமாகும். மதிய உணவுக்குப்பின் மாநாடு முடிந்த பின், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவுகளை வெளிப்படுத்தும் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படும். கடந்த 17 ஆண்டுகளாக தமிழ்த் தேசியப் பரப்பில் உணர்ச்சிகரமான முன்னணிப் போராளிகள் இந்த அம்மாக்கள் தான். எல்லாப் போராட்டங்களிலும் அவர்கள் காணப்படுவார்கள். எல்லாப் போராட்டங்களின் போதும் போராட்டத்தை உணர்ச்சிகரமாக, கொந்தளிப்பானதாக மாற்றுவது அவர்களுடைய கண்ணீரும் கதறலும் தான். ஆனால் கடந்த 17ஆண்டுகளாக அவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான அதாவது, நிலை மாறுகால நீதிக்கான தீர்மானத்தின் அடிப்படையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஒர் அலுவலகம் திறக்கப்பட்டது. ஆங்கிலத்தில் OMP-ஓஎம்பி என்று அழைக்கப்படுகின்ற அந்த அலுவலகம் 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டதிலிருந்து இன்று வரையிலுமான கிட்டத்தட்ட 9 ஆண்டுகளாக அது என்ன செய்தது என்பதனை அவர்கள் அண்மையில் ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்தினார்கள்.

இம்முறை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினத்தை வழமை போல கொழும்பில் கொண்டாடாமல் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவது என்று அது தொடர்பான அமைச்சும் ஓஎம்பியும் முடிவெடுத்தன. அந்த அடிப்படையில் கடந்த 25 ஆம் திகதி அதாவது சர்வதேச நாளுக்கு ஐந்து நாட்கள் முன்னதாக அந்த நிகழ்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்வு தொடர்பாக அறிவிப்பதற்காக ஊடகவியலாளர் சந்திப்பு அதற்கும் சில நாட்களுக்கு முன் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. அந்தச் சந்திப்பின் போது ஓஎம்பி வெளிப்படுத்திய தகவல்கள் வருமாறு…

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எமக்குக் கிடைக்கப்பெற்ற 23.352 விண்ணப்பங்களில், முப்படையினர் மற்றும் இரட்டிப்பான விண்ணப்பங்களைத் தவிர்த்து 16.966விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 9.819 முறைப்பாடுகளுக்குரிய பூர்வாங்க விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. மேலதிக விசாரணைகளுக்காகக் கோரப்பட்ட சுமார் 2.000விண்ணப்பங்கள் எமது தலைமை அலுவலகத்தில் உள்ள தேடுதல் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏறத்தாழ 800விண்ணப்பங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கடிதங்கள் மூலம் அனுப்பி விவரங்கள் தேடப்பட்டு வருகின்றன. அதேவேளை எமக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இதுவரை 31 பேரை நாம் நேரடியாகக் கண்டு பிடித்துள்ளோம்.

இடைக்கால நிவாரணம் வழங்குவதற்காக இதுவரை 7.726 முறைப்பாடுகள் இழப்பீட்டு அலுவலகத்துக்குச் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன், 5.540 விண்ணப்பதாரிகளுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்படும் இரண்டு இலட்சம் ரூபா கொடுப்பனவானது இழப்பீடு அல்ல. அது காணாமல் போன ஆட்களில் தங்கியிருப்பவர்களுக்கான வாழ்வாதார உதவியாகும். உரிய இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தற்போதைய அரசாங்கமும் நீதி அமைச்சரும் இணைந்து விசேட குழுவொன்றை நியமித்துள்ளனர்.

அக்குழுவின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர் இழப்பீடு வழங்கும்முறை குறித்துத் தீர்மானிக்கப்படும் காணாமல் போன ஆட்கள் தொடர்பான விடயங்களில் தற்போதைய அரசாங்கம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. இதற்கான விசாரணைகள் மற்றும் ஏனைய செலவுகளுக்காக இந்த வருடம் 375 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், அரசாங்க நியமனங்களுக்குத் தடை உள்ள நிலையிலும், பிரதமரின் செயலாளரின் விசேட அனுமதியுடன் எமது அலுவலகத்துக்கு 69புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ள அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கமைவாக தற்போது 47பேர் சேவையில் இணைந்துள்ளதுடன், எஞ்சியோருக்கான நியமனங்கள் அடுத்தடுத்த வாரங்களில் வழங்கப்படவுள்ளன

ஆனால் அம்மாக்கள் ஓஎம்பியை ஏற்றுக் கொள்ளவில்லை. 25ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்த நிகழ்வை அவர்கள் புறக்கணித்தார்கள் எதிர்த்தார்கள்.ஆர்ப்பாட்டம் செய்தார்கள். போலீசார் பலம் பிரயோகித்து அவர்களை அங்கிருந்து அகற்றினார்கள்.

அம்மாக்கள் ஏன் ஓஎம்பியை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்கு கடந்த எட்டு ஆண்டுகளிலும் பல காரணங்களைக் கூறலாம். எனினும் மிகப் பிந்திய, மிகக் கூர்மையான ஒரு காரணத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். ஆளுநர் அலுவலகத்தில் இக் கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஊடகச் சந்திப்பின் போது ஓஎம்பி கூறுகிறது, இதுவரை 31பேர்களை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாக. அதாவது அந்த 31பேரும் காணாமல் ஆக்கப்படவில்லை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று. அப்படியென்றால் அவர்களுடைய விவரங்களை வெளியில் விடுங்கள் என்று அம்மாக்கள் கேட்கிறார்கள் குடிமக்கள் சமூகங்கள் கேட்கின்றன. மனித உரிமை ஆர்வலர்கள் கேட்கின்றார்கள். ஆனால் ஓஎம்பி கூறுகிறது. அவர்கள் அதாவது உயிரோடு இருப்பவர்கள் அந்த விபரங்களை வெளியே சொல்லக்கூடாது என்று தங்களிடம் கேட்டிருப்பதாக. அவர்கள் ஏன் அதை மறைக்கச 'சொல்லிக் கேட்கிறார்கள்?

ஏனென்றால் அவர்கள் உயிருடன் இருந்து கொண்டு தாங்கள் காணாமல் ஆக்கப்பட்டு விட்டதாக பொய்யான முறைப்பாட்டை ஓஎம்பிக்குச் செய்திருக்கிறார்கள். அப்படியென்றால் அது குற்றம்.அந்தக் குற்றச் செயலை செய்தவர்களை விசாரிக்க வேண்டும். அந்த குற்றத்தை ஏன் மறைக்க வேண்டும்? இது குழந்தைப் பிள்ளைத்தனமான ஒரு காரணமாகத் தோன்றவில்லையா?

இப்படித்தான் இருக்கிறது ஓஎம்பியின் செயற்பாடுகள். அம்மாக்கள் ஓஎம்பியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் அரசாங்கம் ஓஎம்பியின் அனைத்துலக அங்கீகாரத்தை எப்படி மேலும் பலப்படுத்துவது என்று சிந்திக்கின்றது. கடந்த 25 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வும் அதன் பின்னரான நிகழ்வுகளும் அதைத்தான் காட்டுகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களில் ஒரு பகுதியில் தங்களோடு நிற்கிறார்கள். தாங்கள் கொடுக்கும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்று அரசாங்கம் காட்டப்பாக்கிறது. இதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் ஓஎம்பியை ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் காட்டப்பாக்கிறது. அப்படிக் காட்டினால் தான் ஓஎம்பியின் சர்வதேச அங்கீகாரத்தை மேலும் பலப்படுத்தலாம். அதைவிட முக்கியமாக, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை மேலும் பலப்படுத்தலாம்.

செம்மணி அகழ்விலும் அரசாங்கம் அதைத்தான் செய்கின்றது.செம்மணி அகழ்வாராய்ச்சிக்கு அரசாங்கம் நிதியைத் தொடர்ந்து வழங்கி வருகிறது. இதன்மூலம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை வெளிநாடுகளில் நிரூபிப்பதே அவர்களுடைய நோக்கமாகக் காணப்படுகிறது.

கடந்த 25 ஆம் தேதி யாழ்.மாவட்ட செயலகத்தில் உரை நிகழ்த்திய அமைச்சர் சந்திரசேகரன்.ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதி அனுரகுமரவின் மூத்த சகோதரரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் ஒருவர்தான். அனுரவின் தாயார் இப்பொழுதும் மூத்த மகனுக்காகக் காத்திருக்கிறார்.அவருக்காகப் பிரார்த்திக்கிறார்.. என்று அமைச்சர் சொன்னார். அது உண்மை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கண்ணீரின் பெறுமதி அனுரவிற்கு நன்கு தெரியும். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மத்தியில் இருந்து வந்த ஒரு ஜனாதிபதி அவர். எனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உணர்வுகளை அவரை விட வேறு எந்த ஜனாதிபதியும் புரிந்து கொள்ள முடியாது. அந்த அடிப்படையில (18ம் பக்கம் பார்க்க)

# முட்டி மோதப் போகும் இராஜதந்திரங்கள்

கட்டுரையாளர்:
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



கடந்த செவ்வாய்க்கிழமை 12 நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதிஅநுர குமார திசாநாயக்கவை சந்தித்து தமது நியமனச் சான்றுப் பத்திரங்களைக் கையளித்திருந்தனர்.

ஒரு நாட்டின் தூதுவராக முன்மொழியப்பட்டவருக்கு அந்த நாட்டின் அங்கீகாரங்கள் அனைத்தும் பெறப்பட்டதை அடுத்து, நியமிக்கப்படும் நாட்டின் அனுமதி உறுதி செய்யப்பட்ட பின்னர், அந்தப் பதவியை பொறுப்பேற்றுக் கொள்வதற்கான இறுதிச் செயல்முறை தான், நாட்டின் தலைவரிடம் நியமனச் சான்றுப் பத்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு ஆகும்.

கிட்டத்தட்ட ஏழு மாதங்களாக வெற்றிடமாக இருந்து வந்த அமெரிக்கத் தூதுவர் பதவியை நிரப்ப வந்த எரிக் மேயர், அண்மையில் வெற்றிடமாகிய சீனத் தூதுவர் பதவியை நிரப்புவதற்காக நியமிக்கப்பட்ட வெய் ஹவாசியாங் உள்ளிட்ட 12 பேர் தமது நியமனச் சான்றுகளை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிடம் கையளித்திருந்தனர்.

இதன் மூலம் இன்று, உலகளவில் முதல் நிலைக்குப் போட்டிபோடுகின்ற இரண்டு நாடுகள், இலங்கையில் தங்களின் இராஜதந்திர நிலைகளை உறுதி செய்திருக்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் இலங்கையை மையப்படுத்தி பெருமளவிலான காய்நகர்வுகளை முன்னெடுத்து வருபவை.

இந்தியப் பெருங்கடலில் இலங்கையை தங்களின் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாளியாக கருதுகின்ற– அல்லது கூட்டாளியாக வைத்துக் கொள்ள விரும்புகின்ற நாடுகள் இவை.

இந்த நாடுகளின் புதிய தூதுவர்களின் அணுகுமுறைகள் எதிர்வரும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில், எவ்வாறு அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பு உருவாகியிருக்கிறது.

கடைசியாக அமெரிக்கத் தூதுவர் பதவியை வகித்த ஜீலி சங், கோவிட் தொற்றுக் காலத்தில் நாட்டிற்கு வந்து, பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடி போன்ற சூழல்களில், அமெரிக்காவின் நகர்வுகளைக் கையாண்டவர்.

அமெரிக்காவுக்கு சார்பில்லாமல் இருந்த கோட்டாவின் அரசாங்கத்தின் கொள்கையை, மாற்றியமைப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட தரப்புகளின் மூலமாக அவர் பல்வேறு உத்திகளை கையாண்டிருந்தார். அவர் கொழும்பில் கால் வைத்த போது, அமெரிக்காவுக்குச் சாதகமற்றதாக இருந்த இலங்கையின் அரசியல் சூழல், இந்த ஆண்டு ஜனவரியில் அவர் பணியை முடித்துத் திரும்பும் போது, முற்றிலுமாக மாற்றம் கண்டிருந்தது. குறிப்பாக, அமெரிக்காவைப் பின்பற்றுகின்ற, அமெரிக்காவின் நிழலில் இருக்கின்ற ஒரு நாடாக மாற்றம் கண்டிருக்கிறது இலங்கை.

அதுவும், அமெரிக்க ஏகாதிபத்தியவாதத்திற்கு எதிராக போராடிய சே குவேராவின் வழியில், இலங்கையிலும் மார்க்சிச அரசாங்கம் ஒன்றை உருவாக்கும் இலக்கில் தோற்றுவிக்கப்பட்ட ஜே.வி.பியின் தலைமையிலான அரசாங்கமே, இவ்வாறான நிலை மாற்றத்திற்கு உட்பட்டிருக்கிறது. இந்த நிலை மாற்றத்தில் ஜீலி சங் கணிசமான பாத்திரத்தை வகித்திருந்தார்.

இந்தச் சூழலில், அவரைப் பதிலீடு செய்யும் நோக்கில் கொழும்பு வந்துள்ள எரிக் மேயர், அடுத்த சில ஆண்டுகளில் தன் இராஜதந்திரப் பணியை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறார் என்பது கவனிப்புக்குரிய விடயமாக இருக்கும். அவர் இலங்கை வந்த பின்னர், வெளிப்படுத்தியிருக்கின்ற முதல் கருத்து அவரது இராஜதந்திர மூலோபாயத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

அமெரிக்கா — இலங்கை உறவை மேலும் வலுப்படுத்துவதையும், புதிய பொருளாதார வாய்ப்புகளைத் திறப்பதையும், எமது பாதுகாப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்துவதையும், சுதந்திரமான, பாதுகாப்பான மற்றும் செழிப்பான இந்தோ-பசுபிக் பகுதியை மேம்படுத்துவதையும் நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்’’ என அவர் சுருக்கமாக குறிப்பிட்டிருந்தார்.



பொருளாதார வாய்ப்புகளை திறப்பது, பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, சுதந்திரமான பாதுகாப்பான, செழிப்பான இந்தோ-பசுபிக் பகுதியை மேம்படுத்துவது ஆகிய மூன்று பிரதான விடயங்கள் அவரது கருத்தில் உள்ளன.

இலங்கை ஒரு சிறிய நாடு. அதன் பொருளாதாரமும் மிகச் சிறியது. அமெரிக்காவின் பொருளாதாரம் மிகப் பெரியது. ஆனாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வாய்ப்புகளை திறப்பது என்ற அவரது நோக்கம் தெளிவற்றதாக உள்ளது. ஏற்கெனவே இலங்கைக்கு எதிராக வரிகளை ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்த போதும், அதையடுத்து நடத்திய பேச்சுக்களின் போதும், வர்த்தக சமநிலையை அமெரிக்க வலியுறுத்தியது.

இரு தரப்பு வர்த்தகம் சமநிலையில் இருக்க வேண்டும் என்ற அமெரிக்க நிலைப்பாடு, இலங்கைக்கு சாதகமற்றது. ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால் இரண்டு பொருளதாரங்களும் சமமானவையல்ல.

அதனால் இலங்கை ஏற்றுமதி செய்கின்ற அளவுக்கு, அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதிகளை செய்ய முடியாத நிலை இருக்கிறது. இந்த விடயத்தில் நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் வரிக் குறைப்புகள் செய்யப்பட்டன.

இலங்கை மீதான அமெரிக்காவின் வரிகளை கிட்டத்தட்ட முழுமையாக குறைத்து விட்டதாக அண்மையில் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் கூறியிருந்தார். ஆனால், அமெரிக்காவின் பொருளாதார உதவிகள் தனியே உதவும் நோக்கத்தைக் கொண்டதல்ல என்பது முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம்.

அண்மையில் அமெரிக்கத் தூதரகத்தின் எக்ஸ் தளத்தில், இராஜாங்கச் செயலர் மார்க் ரூபியோவின் இரண்டு கருத்துக்கள், பதிவிடப்பட்டன.

வெளிநாட்டுக்கான உதவிகள் விடயத்தில், நாங்கள் வெறும் பணத்தை மட்டும் வழங்கவில்லை, விளைவுகளையும் எதிர்பார்க்கிறோம். என்பது ஒன்று. இன்னொன்று, வெளியுறவுக் கொள்கையை பொருளாதாரக் கொள்கை, எல்லைக் கொள்கை, எரிசக்தி கொள்கை ஆகியவற்றிலிருந்து பிரிக்க முடியாது என்பது. இந்த இரண்டும் எதனைக் கூறுகின்றன? இலங்கைக்கு எதனை வெளிப்படுத்த முனைகின்றன?

ஏதோ ஒரு வகையில் இலங்கைக்கு பொருந்துவதால் தான், அமெரிக்கத் தூதரகத்தின் எக்ஸ் தளம் இதனைப் பதிவிட்டிருக்கிறது.

இலங்கையிடம் இருந்து அமெரிக்கா விளைவுகளை எதிர்பார்க்கிறது. இங்கு விளைவுகள் என்பது, உதவுகின்ற நிதியின் மூலமான விளைவுகளா, அல்லது அதற்குப் பிரதி உபகாரமா என்ற கேள்வி இருக்கிறது. அது போல அமெரிக்காவின் வெளி விவகாரக் கொள்கை, பொருளாதாரம், எல்லை, எரிசக்தி விவகாரங்களில் இருந்து வேறுபடவில்லை, அனைத்தும் ஒருங்கிணைந்தே முன்னெடுக்கப்படு கிறது என்பதும் முக்கியமான விடயம்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்தும் போது, இந்த அடிப்படைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

இலங்கைக்கு அமெரிக்கா விட்டுக் கொடுக்கிறது என்றால், அமெரிக்காவுக்கு எதனை இலங்கை விட்டுக் கொடுக்கப் போகிறது என்று அமெரிக்காவுக்கு நலன்கள் சார்ந்த இராஜதந்திரம். ட்ரம்ப் நிர்வாகம் யாருக்கும் எதையும் சும்மா கொடுத்து விட்டுப் போகத் தயாரில்லை.

அது அரசியலையும், வெளிநாட்டுக் கொள்கையையும், பாதுகாப்பையும், பிராந்திய மற்றும் பூகோள அரசியல் நகர்வுகளையும் வியாபாரமாகவே பார்க்கிறது. பரஸ்பர நலன்களின் அடிப்படையிலேயே கணிக்கிறது.

இந்த நோக்கில் இருந்து பார்க்கும் போது புதிய அமெரிக்க தூதுவரின் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் முயற்சி, இலங்கைக்கு கடினமான முடிவுகள் பலவற்றை எடுக்க நிர்ப்பந்திக்கலாம்.

இலங்கை பல நாடுகளுடன் பாரம்பரிய வர்த்தகத்தைக் கொண்டிருக்கிறது. அதனை முறித்துக் கொண்டு அமெரிக்காவுடன் மாத்திரம் வணிகத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியாத நிலை உள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களால் தான் ஈரான், ரஷ்யா போன்ற நாடுகளுடனான வர்த்தகத்தையே மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலை எதிர் காலத்தில் மேலும் தீவிரமடையும் சாத்தியங்கள் உள்ளன. பகிரப்பட்ட பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதும், சுதந்திரமான, பாதுகாப்பான, செழிப்பான இந்தோ-பசுபிக்கை மேம்படுத்துவதும் வெவ்வேறான அணுகுமறையல்ல.

இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பானதாக வெளிப்படையானதாக, சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, இலங்கையுடனான பாதுகாப்பு உறவுகளை அமெரிக்கா வலுப்படுத்தி வருகிறது.

அமெரிக்காவின் இந்தப் பாதுகாப்பு நலன்கள் பரஸ்பர இராணுவ உதவிகள், பயிற்சிகள், மற்றும் ஒத்துழைப்புகளில் இருந்து கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இதற்காக, அமெரிக்கா பெரியளவில் முதலீடுகளையும் செய்திருக்கிறது. போர்க்கப்பல்கள், ஆயுத தளபாடங்கள், விமானங்கள், ஹெலிகொப்டர்கள், பயிற்சிகள், என அது விரிவானது. இவற்றை மேலும் வலுவாக கட்டியெழுப்புவதில் புதிய தூதுவரின் முயற்சிகள் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இலங்கைக்கான சீனத் தூதவராக இருந்து விடைபெற்றுச் சென்ற கீ சென்ஹொங் இலங்கைக்குள் சீன நலன்களை உறுதியாக வலுப்படுத்தியிருந்தார். அது, சீனாவின் சற்று மாறுபட்ட கண்ணோட்டத்தின் அடிப்படையினலானதாக இருந்தது.

குறிப்பாக ராஜபக் ஷவினரை மையப்படுத்திய, சீன இராஜதந்திரமாக அது பார்க்கப்பட்டது.

கீ சென்ஹொங் காலத்தில் இலங்கையுடனான உறவுகள் வலுப்படுத்தப்பட்டாலும், இலங்கை அரசாங்கம் முற்றிலும் சீனாவுக்கு சார்புடையதாக இருக்கவில்லை. இலங்கையின் பொருளாதார நிலையும், அமெரிக்க அழுத்தங்களும் சீனாவிடம் இருந்து தற்போதைய அரசாங்கத்தை விலகி நிற்க வைத்து விட்டது.

இந்த நிலையை மாற்றும் உத்தியோடு தான் சீனாவின் புதிய தூதுவர் வெய் ஹஜீவாசியாங் கொழும்பு வந்திறங்கியிருப்பதாக தெரிகிறது. அவர் ராஜபக் ஷவினரை மையப்படுத்திய அல்லது, எதிர்க்கட்சியினரை மையப்படுத்திய இராஜதந்திரத்தை முன்னெடுக்காமல், இலங்கை அரசாங்கத்தை மையப்படுத்திய அணுகுமுறையை கையாளத் தொட ங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இது அமெரிக்க– சீன இராஜதந்திரங்கள் முட்டிக் கொள்ளுகின்ற ஒரு சூழலுக்கான அத்திவாரமாகத் தெரிகிறது. இலங்கையை யார் கைக்குள் வைத்திருப்பது, யார் இங்கு மேலதிக்கம் செலுத்துவது என்பதை மையப்படுத்திய போட்டிக்கான களம் இப்போது திறக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து வரும் ஆண்டுகள் இந்தப் போட்டியை மையப்படுத்தியதாக இருக்கப் போகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

# அரசியலில் இங்கிருந்து எங்கு செல்வது?



கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



அரசியல் தொடர்பில் பொதுவாக கேட்கப்படும் கேள்வி என்ன நடக்கின்றது? ஏதாவது நடக்குமாகு? தமிழ் கட்சிகள் என்ன செய்கின்றன? என்னுடன் பேசுகின்றவர்கள் பொதுவாக இவ்வாறான கேள்விகளை கேட்பதுண்டு. குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து பேசுபவர்கள் இவ்வாறான கேள்விகளுடன் தான் வருவார்கள். சில தினங்களுக்கு முன்னர் பேசிய நண்பர் ஒருவர் இப்படிக் கேட்டார் பாருங்கள் விஜயை எவ்வாறு திட்டமிட்டு செயற்பட்டு, அதிகாரத்தை கைப்பற்றியிருக்கின்றார். வடக்கு கிழக்கில் அவ்வாறான புதிய அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றதே – ஏன் என்றார் அந்த நண்பர்.

பொதுவாக வெளியிடங்களில் இடம்பெறும் விடயங்களை, குறிப்பாக தமிழ் நாட்டில் இடம்பெறும் விடயங்களை, எங்களுடைய சூழலோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கு நீண்ட காலமாக இருக்கின்றது. ஆனால் ஒப்பீட்டடிப்படையில் தமிழ் நாட்டின் அரசியல் தாக்கம் பெரியளவில் ஈழத்து அரசியில் இருக்கவில்லை.

இந்தியாவின் தலையீடு என்று வருகின்ற போது தொப்புள் கொடிக் கதைகள் எட்டிப்பார்ப்பதுண்டு. ஈழத்து தமிழ்த் தேசிய அரசியல் என்பது முழுக்க முழுக்க இலங்கையின் பெரும்பாண்மையின, மேலாதிக்க அரசியலின் விளைவாகவே இருந்தது.

வெளியிடத்து போராட்டங்களை பார்ப்பதும், அதனை பாடமாக்குவதும் இயக்க அரசியலின் ஆரம்ப காலத்தின் போக்காக இருந்தது – பாலஸ்தீனிய, லத்தீனமெரிக்க, அபிரிக்க புரட்சிகர அனுபவங்களை பேசுவதும், போற்றுவதும் ஒரு அரசியல் நாகரீகமாக இருந்தது. அதே போன்று, இடதுசாரி அரசியல் பேசுவதை பலரும் தங்களின் முற்போக்கின் அடையாளமாக்கிக் கொண்டனர். அரசியல் வாசிப்பின் பக்கமாக வந்த நாட்களை திரும்பிப் பார்த்தால், எங்களுடைய அனைத்து வாசிப்புக்களுமே தமிழ் நாட்டிலிருந்து வெளியான நூல்களின் ஊடாகத் தான் நிகழ்ந்தது. ஆங்கிலத்தில் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத அன்றைய சூழலில் மொழிபெயர்ப்பு எழுத்துக்களே என்னுடைய சிந்தனையை தீட்டிக் கொள்ளப் பயன்பட்டது.

ரஸ்ய புரட்சிகர எழுத்துக்களிலிருந்து லத்தீனமெரிக்க எழுத்துக்கள் வரையில், அனைத்துமே தமிழ் நாட்டு வெளியீடுகள் தான். இப்போதும் அவ்வாறான நூல்கள் வெளிவருவதாக கேள்விப்பட்டிருக்கின்றேன் – அதனை படிப்பவர்களும் இருக்கின்றனர். ஒரு வகையில் அன்றைய நாட்களில் இவ்வாறான நூல்களை படிப்பதும் சிந்திப்பதும், அதற்கும் மேல், அவற்றை படிக்கின்றோம் என்று மற்றவர்களுக்கு காண்பித்துக் கொள்வதும் கூட ஒரு அலாதிப் பிரியமாகவும் இருந்தது. நாங்கள் புரட்சிகரவாதிகள் என்று காண்பித்துக் கொள்வதற்கும் இவ்வாறான வாசிப்புக்கள் பயன்பட்டது.

ஆனால் இன்று திரும்பிப் பார்த்தால், இத்தனையாயிரம் புட்சிகர நூல்கள் (இலக்கியம் உட்பட) வெளிவந்தும், அவற்றை படிப்பவர்கள் பல்லாயிரக் கணக்கில் இருந்தும் கூட இறுதியில், அவற்றின் சமூகப் பெறுமதி என்ன என்னும் கேள்விதானே எஞ்சியிருக்கின்றது!

ஏனெனில், இன்றும் தமிழ் நாட்டில், அரசியல் மாற்றம் என்றால், ஒரு சினிமா நடிகரைத் தானே திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

பாரம்பரிய கட்சிகளை அகற்றுமளவிற்கு ஏன் புதிய முற்போக்கு அரசியல் சக்திகள் எழுச்சியடையவில்லை? அது விஜயாக இருந்தாலும், சீமானாக இருந்தாலும் இறுதியில் சினிமா தானே மாற்றத்தின் கருவியாக நோக்கப்படுகின்றது. மூத்த அரசியல்வாதிகள் என்போர் அதிலும் இடதுசாரித்துவம் பேசியவர்கள் கூட சினிமா நடிகர்களின் கூடாரங்களைத் தானே தேடிப் போக வேண்டியிருக்கின்றது. அவ்வாறாயின் புரட்சிகர வாசிப்பின் பெறுமதி என்ன? ஈழ அரசியலின் ஆரம்பத்தில் நோக்கப்பட்ட பாலஸ்தினக் கவர்ச்சி, அதே போன்று ஏனைய புரட்சிகர இயக்கங்கள் மீதான கவர்ச்சியும் இப்படியான ஒன்று தான். இவ்வாறான கதைகளை அதிகம் பேசாத விடுதலைப் புலிகள் தான் இறுதியில் ஒரு பலமான தமிழ் இராணுவத்தை கட்டிமைத்தனர் என்பது தான் வரலாறு.

ஆனாலும் அவர்கள், இந்த பிராந்தியத்தின் ஒரேயொரு வதிவிட சக்தியான இந்தியாவை புரிந்து கொண்டு செயற்படத் தவறியதால், பனைமரமாக வளர்ந்தும் பயனில்லாமல் போனது. இனி அது பற்றிப் பேசிப் பயனில்லை தான், ஆனால் கடந்த காலத்தை தொட்டுக் கொள்ளும் போது, இவ்வாறான விடயங்களை தொட்டுக் கொள்வதை தவிர்க்க முடியாதுள்ளது.

எனவே ஒரு விடயத்தை தெளிவாக குறித்துக் கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட சூழலின் அரசியல் தேவைகளுக்கு இன்னொரு சூழலில் அரசியல் அறுவடைகள், அனுபவங்கள் உதவாது. அவற்றை படிப்பதில் தவறில்லை ஆனால் அவற்றைக் கொண்டு எங்களுடைய சூழலை உற்று நோக்குவது முற்றிலும் தவறானது. இந்தக் கட்டுரையாளர் தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் விடயம் ஒன்றுண்டு, அதாவது, ஒன்றின் வெற்றியை, குறிப்பிட்ட அரசியல் சூழலில், கிடைக்கும் வாய்ப்புக்களை முடிந்தவரையில் ஆக்கபூர்வமாக பயன்படுத்திக் கொண்டு பயன்பெறுவதன் மூலம்தான் எமக்கான வெற்றியை தக்க வைக்க முடியும்.

இதற்கு, இன்றைய பாலஸ்தீனம் மிகச் சிறந்த உதாரணம். பாலஸ்தீனம் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. அதற்கு அரசாங்கமும் உண்டு ஆனால் அந்த மக்களால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகிறதா? இல்லையே ஏன் ஏனெனில் சர்வதேச அங்கீகாரம் கிடைத்தாலும் கூட, பிராந்திய அரசியல் சூழல் அதற்கு ஒத்துழைக்காது விட்டால், அவர்களுக்கான சர்வதேச அங்கீகாரம் கூட அவர்களுக்குப் பயன்படாது. இஸ்ரேலின் முழுமையான ஒத்துழைப்பின்றி பாலஸ்தீனம் என்பது எப்போதுமே நிம்மதியற்ற பாலஸ்தீனம் மட்டும் தான். ஓ– பாலஸ்தீனமே என்று கவிதை எழுதிக் கொண்டிருக்க வேண்டியது தான் நம்மில் சிலர், ஓ யாழ்ப்பாணமே என்று வசனம் பேசுவது போன்று.

அரசியலில் வெற்றி என்பது எப்போதுமே முழுமையான ஒன்றல்ல – அது ஒரு சிறு பகுதி மட்டும்தான் – ஏனெனில் அரசியல் என்பது ஒரு குறிபிட்ட சூழலுடன் முடிந்து விடும் விடயமல் மாறாக, அது ஒரு முடிவற்ற அஞ்சலோட்டம். தலைமுறை தலைமுறையாக ஓடுவது. ஒரு தலைமுறையின் அடைவுகளை அடுத்த தலைமுறை தனக்கான அரசியல் அஸ்திபாரமாக்கிக் கொள்கின்றது. ஆனால் எங்களுடைய அரசியல் நிலைமையோ சிக்கலானது. ஏனெனில் எமக்கு முன்னர் இருந்தவர்கள் எவருமே ஒரு அறுவடையை விட்டுச் செல்லவில்லை. தோல்விகளை மட்டுமே விட்டுச் சென்றிருக்கின்றனர்.

செல்வநாயம் தொடக்கம் சம்பந்தன் வரையில் அனைவருமே தோல்விகளையே அடுத்த தலைமுறையிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கின்றனர். ஆங்கில எழுத்துக்களை தங்களுக்கு பிடித்தவாறு – இயக்கம், புரட்சி, முன்னணி, கழகம் என்று போட்டுக் கொண்டவர்களும் தோல்விகளை மட்டுமே, அடுத்த தலைமுறையிடம் கையளித்திருக்கின்றனர்.

இந்த நிலையில்தான், யுத்தம் முடிந்து பதினேழு ஆண்டுகளாகியும், இங்கிருந்து எங்கு செல்வது என்னும் கேள்விக்கு பதிலில்லாமல் நமது அரசியல் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. உண்மையிலேயே இங்கிருந்து எங்கு செல்ல முடியும்? முன்னைய கட்டுரை ஒன்றிலும் விவாதித்திருக்கின்றேன் அதாவது, தோற்கக் கூடாத யுத்தம் ஒன்றில் தோற்றால், அதன் பின்னர் நிலைமை படுமோசமாகி விடும். அப்படியான தோல்விக்கு பின்னர், நாங்கள் எங்குமே நமிர்ந்து பேசும் நிலையிலிருக்க முடியாது மாறாக, கேட்கும், பணிவுடன் கோரும் இல்லாவிட்டால் கெஞ்சும் நிலையில் தான் இருக்க முடியும். வட்டுக் கோட்டை பற்றிப் பேசுவது, நீதி பற்றிப் பேசுவது, சர்வசன வாக்கெடுப்பு பற்றிப் பேசுவது என்பதெல்லாம் எங்களுடைய விருப்பங்கள் மட்டுமே அதற்கு அரசியல் ரீதியில் எவ்வித பெறுமதியும் இல்லை.

இப்போது என்ன செய்யலாம் என்னும் கேள்விக்கு இந்தக் கட்டுரையாளின் பதில் எப்போதும் ஒன்றுதான். இருப்பதை முதலில் கணக்கெடுக்க வேண்டும். அதனைக் கொண்டு படிப்படியாக முன் செல்வதற்கான வழிகளை ஆராய வேண்டும். இன்றுள்ள சூழலில் அரசியல் பிரதிநிதித்தும் ஒன்றுதான் தமிழர்களின் அரசியலாக இருக்கின்றது. இந்த பிரதிநித்துவம் தான் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மாகாண சபை உறுப்பினர்களாகவும் உள்ளுராட்சி மன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றன.

இதனை முறையாக, சரியாக பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றால் தகுதியுள்ளவர்கள், ஆற்றலுள்ளவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் கடந்த பதினேழு ஆண்டுகளாக அவ்வாறு நிகழவில்லை. அப்படி நிகழ்ந்திருந்தால் இன்றிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் பலர் இந்தப் பொறுப்பிற்கு வந்திருக்க மாட்டார்கள்.

ஒரு பெரும் தோல்விக்கு பின்னரான சூழலில் தகுதியுள்ள தனிநபர்கள்தான் ஒரு சமூகத்தின் அரசியல் சொத்தாக இருப்பர். வேறு எதுவும் அந்த சமூகத்திடம் இருக்காது. அவ்வாறான தகுதியுள்ள தனிநபர்களை சமூகமும், தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்களும் பலப்படுத்த வேண்டும். அவர்களை சமூகத்தின் அதிகாரமுள்ளவர்களாக ஆக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் சமூகத்தை அரசியல் ரீதியில் வழி நடத்த முடியும். ஆனால் அப்படி நடக்கவில்லை. இதனால்தான் சமூகம் அரசியல்ரீதியில் இருந்த இடத்திலிருந்து அசைய முடியாமல் இருக்கின்றது.

உதாரணமாக, மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்று, அதன் அதிகாரத்தை தமிழர்கள் கைப்பற்றினாலும் கூட தகுதியுள்ளவர்கள் அங்கு இல்லாது விட்டால் அதன் பயன் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை. இதில் மக்களுக்கும் பொறுப்புண்டு அதே போன்று, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போருக்கும், புலம்பெயர் செயற்பாட்டாளர்களுக்கும் பாரிய பொறுப்புண்டு. உங்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களிலிருந்து விடயங்களை நோக்காமல், மக்களின் நலனில் இருந்து விடயங்களை நோக்கினால் மட்டும் தான் இந்த விடயத்தில் மாற்றம் நிகழும்.

# சாமி தூக்கச் சம்பளம் கொடுக்கும் ஒரு சமூகத்தில் காசைக் கொட்டும் உபயகாரர்?

பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகன் கோவிலில் இரவுத் திருவிழாவின் போது பயன்படுத்தப்பட்ட ஒளிச்செறிவுமிக்க மின் குமிழ்களினாலும்.வான வேடிக்கையில் வெளிப்பட்ட புகையினாலும் பக்தர்களின் விழிகள் பாதிக்கப்பட்டன. இந்தச் செய்தியின் சூடு அடங்க முன்னரே கிளிநொச்சி ராமநாதபுரம் புதுக்காட்டு அய்யனார் கோவில் காணொளிகள் வெளி வந்தன. அந்த காணொளிகளில் தேர்த் திருவிழாவில் சிங்களப் பெண்கள் நடனம் ஆடுகிறார்கள்.

ஒரு புறம் கோவில்களில் சாமி தூக்குவதற்கு இளையவர்கள் இல்லை. ஆனால் இன்னொருபுறம் வான வேடிக்கைகள், வண்ண ஒளி வினோதங்கள், அழகிகளின் நடனங்கள், சென்டை மேளக் கச்சேரிகள், சின்ன மேளக் கச்சேரிகள், சரிகமப, சுப்பர் சிங்கர் கலைஞர்களின் இசைக்கச்சேரிகள் போன்றவற்றில் தாராளமாக இளைஞர்களைக் காணக்கூடியதாக உள்ளது.

தீவுப் பகுதியில் உள்ள ஒரு சிறிய ஆலயத்தை பரிபாலிப்பவர் சொன்னார். திருவிழா காலங்களில் சாமி தூக்குவதற்கு அயல் கிராமத்தில் இருந்து காசு கொடுத்து ஆட்களை அழைத்து வருவதாக. அதற்காக அவர்களுக்கு குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. சூரன் போரின்போதும் சூரனைக் காவிக் கொண்டு ஓட அவ்வாறு ஆட்களைச் சம்பளத்துக்குக் கொண்டு வருவதாக அவர் சொன்னார். சில கோவில்களில் சாமி தூக்க ஆளில்லாத போது இசை நிகழ்ச்சிக்கு வரும் இசைக்குழுவைச் சேர்ந்தவர்கள் சாமி தூக்குவதும் உண்டு.

இவ்வாறு காசு கொடுத்துச் சாமி தூக்கும் ஒரு காலகட்டத்தில் காசைக் கொட்டி இசை நிகழ்ச்சிகளும் நடன நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அண்மையில் வடமராட்சிக்குப் போய்விட்டு இரவுவேளை திரும்பிக் கொண்டிருந்தேன். பருத்தித்துறை வீதியில் கிட்டத்தட்ட ஆறு இடங்களில் வீதி நீட்டுக்கும் ஒளியால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் திருவிழாக்கள் இரவில் ஒளி வெள்ளத்தில் இசை வெள்ளத்தில் மூழ்கடிக்கப்படுகின்றன

உதாரணமாக யாழ்ப்பாணம் கலிகைக் கந்தன் ஆலயத்தில் நடந்த இசை நிகழ்ச்சிக்கு வெளியில் இருந்து கொண்டு வரப்பட்ட இசைக் குழுவுக்கு கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் வரை செலவழிக்கப்பட்டதாக ஒரு தகவல் உண்டு. அதுபோல மூத்த விநாயகர் ஆலயத்துக்கு அழைத்து வரப்பட்ட இசை குழுவுக்கு ஒரு கோடிக்கு மேல் செலவழிக்கப் பட்டதாக ஒரு தகவல் உண்டு. வவுனியாவில், நரசிம்ம வைரவர் ஆலயத்தில் நடந்த இசை நிகழ்ச்சிக்கு கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டதாக ஒரு தகவல்.

உள்ளூர் இசைக் குழுக்களின் இசை நிகழ்ச்சிகளுக்கு கிட்டத்தட்ட 5 லட்சம் வரை கொடுக்கப்படுகிறது. சரிகமப, சுப்பர் சிங்கர் பாடகர் பாடகியருக்கு சம்பளமாக கிட்டத்தட்ட ஒன்றை லட்சம் கொடுக்க வேண்டும். இது உள்ளூர் சரிகமப பாடகர்களுக்கும் பொருந்தும் நிகழ்ச்சி நடக்கும் மேடையின் அளவுக்கு ஏற்ப மேடைக்கு செலவாகும். அது சராசரியாக 40 ஆயிரம் ரூபாயிலிருந்து பல லட்சங்கள் வரை வரும். மேடையின் அளவுக்கேற்ப ஒலி ஒளி சேவைகளுக்கான செலவும் அதிகரிக்கும்.

மேடையின் ஒளி அலங்காரம், ஒளி வினோதங்களுக்கு பட்ஜெட்டுக்கு ஏற்ப காசு கூடும். எத்தனை எல்ஈடி மின் குமிழ்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்து காசும் கூடும்.



லட்சங்களை கொட்டி ஆடிப்பாடிக் கொண்டாட ஒரு தொகுதி கோவில் நிர்வாகங்களும் உபயகாரர்களும் தயாராக இருக்கிறார்கள். உபயகாரர்களில் உள்ளூர் பணக்காரர்களும் புலம் பெயர்ந்து வாழும் பணக்காரர்களும் உண்டு. புலம்பெயர்ந்த காசில் மிதப்பவர்களும் உண்டு. உபயகாரரின் நிதிக் கொள்ளளவும் அவருடைய ரசனை மட்டமும் நிகழ்ச்சியின் கலைத்தரத்தைத் தீர்மானிக்கின்றன.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட, ராமநாதபுரம் புதுக்காட்டு அய்யனார் கோவிலில் தென்னிலங்கை நடனக் குழுவை அழைத்துக் கொண்டு வந்தவர் கனடாவில் வசிக்கும் ஒரு புலம் பெயர்ந்த தமிழர் ஆவார். சிறிய குடிலாக இருந்த அக் கோவிலை பெரிதாக்கியவர் அவர். அதனால் அவர் கோவில் நிர்வாகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் அளவுக்குப் பலமாகக் காணப்படுகிறார். அன்றைக்கு தேர் பின்னேரம் நாலு மணிக்கு இழுக்கப்பட்டதே அவருடைய விருப்பத்தின்படி தான் என்று கூறப்படுகிறது. தேர் வெளி வீதி சுற்றும் போது அவருடைய வீட்டின் வழியாகவும் செல்லும். தேர் கோவில் வந்து சேர நான்கு மணித்தியாலங்களாவது எடுக்கும் என்று ஓர் ஊர்க்காரர் சொன்னார். அந்த உபயகாரருக்கும் அருகில் உள்ள வான் படைத் தளத்தின் பொறுப்பதிகாரிக்கும் இடையே நல்லுறவு உண்டு என்று கருதப்படுகிறது. தென்னிலங்கையில் இருந்து நாட்டியக் குழுக்களை கொண்டு வருவதற்கு அந்த வான் படை முகாமின் பொறுப்பதிகாரியும் உதவியதாக ஒரு கதை உண்டு.

உபயகாரர்கள் குறிப்பாக புலம் பெயர்ந்து வாழும் உபயகாரர்கள் ஊரில் தங்களுடைய செல்வச் செழிப்பைக் காட்டுவதற்கு ஊர்க் கோயிலை கோவில் திருவிழாவை ஒரு குறி காட்டியாகப் பயன்படுத்துகிறார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஒரு மேடையில் வைத்துக் கேட்டார். புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் உள்ளூரில் ஒரு மரத்தின் கீழ் சிறு குடிலாக இருந்த கோவில்களை பெருங்கோவில்களாகக் கட்டி எழுப்புகிறார்கள். ஆனால் அவற்றை அவர்களுடைய அடுத்தடுத்த தலைமுறை பராமரிக்குமா? என்று.

யாழ்ப்பானத்தின் உட்கிராமங்களில் அவ்வாறு புனரமைக்கப்பட்ட பல ஆலயங்கள் திருவிழா நாட்களைத் தவிர ஏனைய நாட்களில் குப்பை சேர்ந்து அசுத்தமாக காணப்படுகின்றன என்று சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சொன்னார். கோவில்களைப் புனரமைத்து விட்டு புலம் பெயர்ந்த தமிழர் திரும்பிச் சென்று விடுவார். ஊரில் கோவில்களைக் கூட்டித் துப்புரவாக்கிப் பராமரிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் இல்லை. இதனால் பல கோவில்கள் சுத்தமாகப் பேணப்படுவதில்லை.

புலம் பெயர்ந்த ஊர்க்காரரின் நிதிப்பலம் ஆலய நிர்வாகத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது. ஆலய நிர்வாகம் அல்லது அறக்கட்டளை சீர்குலையும் போது அங்கே காசு அதிகாரம் செலுத்துகிறது. ஒன்றுக்கொன்று எதிரான குழுக்கள் தோன்றுகின்றன. கோயில் நீதிமன்றத்துக்குப் போகின்றது. மட்டக்களப்பில் மட்டும் 80க்கும் குறையாத கோயில்கள் நீதிமன்றத்தில் நிற்பதாக அங்குள்ள ஊடகவியலாளர் ஒருவர் சொன்னார். யாழ்ப்பாணத்தில் அதை விட அதிகமா?

ஆனால் எல்லாக் கோவில்களிலும் நிலைமை அப்படியில்லை என்று உள்ளூர் இசைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். சில கோவில்களில் நிர்வாகம் மிகவும் இறுக்கமாக இருக்கும் என்றும், இதைத் தான் பாட வேண்டும் இதைப் பாடக்கூடாது என்று தங்களுக்கு அறிவுறுத்தப்படுவதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். மாறாக எங்கே கோவில் நிர்வாகம் சீராக இல்லையோ அல்லது குழுக்களாகச் சிதறிக் கிடக்கிறதோ அங்கே காசுடைய உபயகாரர் முடிவுகளை எடுப்பவராகக் காணப்படுகிறார்.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



ஏனைய மதங்களைப் போலன்றி இந்து மதம் ஒரு மைய நிர்வாகத்தைக் கொண்டது அல்ல. அது பேரரசன் இல்லாத பேரரசு. எனவே ஆலய அறக் கட்டளைகளையும் உள்ளூர்க் கோவில் நிர்வாகங்களையும் ஒரு மையத்தில் இணைக்கும் சமயக் கட்டமைப்பு எதுவும் இல்லை. இதனால் கோவில் நிர்வாகங்கள் அவற்றின் பலம் பலவீனத்துக்கு ஏற்ப முடிவுகளை எடுக்கின்றன.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானம் 43 ஆண்டுகளாக மகளிர் இல்லத்தை நடத்தி வருகிறது. இங்கே வளர்க்கப்பட்ட பிள்ளைகள் 26 பேருக்கு இதுவரை திருமணம் செய்து கொடுத்திருக்கிறது. அவர்களின் 14 பேருக்கு வீடு கட்டிக் கொடுத்திருக்கிறது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கும் பார்வை இழந்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்களுக்கும் ஒவ்வொரு மாதமும் நிதி உதவி செய்கிறது.

அண்மையில் ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடக்கூடிய அன்னசத்திர மடம் ஒன்றைக் கட்டித் திறந்திருக்கிறது. எட்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இந்த அன்னசத்திர மடமானது அறநெறி வகுப்புகளுக்கு எப்பொழுதும் திறக்கப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமம் புன்னாலைக் கட்டுவன் வடக்கில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுதி ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது. கடந்த 24 ஆம் திகதி.அங்கே பால் காய்ச்சப் பட்டது. செல்வச் சன்னதி ஆலயம் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்கிறது. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயமும் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கு கணக்கானவர்க்கு அன்னதானம் செய்கிறது.

மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவிலின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஒரு கல்விக் கட்டமைப்பானது கடந்த இரண்டு ஆண்டுகளாக மருத்துவ முகாம்களை நடாத்தி வருகிறது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவ முகாம்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. மேலும் கட்புரை நோயாளிகளுக்கு இலவசமாக சத்திர சிகிச்சைகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. இதுவரை 200க்கும் குறையாதவர்கள் அதனால் பயனடைந்திருக்கிறார்கள்.

உள்ளூரில் சிறிய கோவில்கள் ஆர்ப்பாட்டமில்லாமல் அன்னதானம் செய்கின்றன.சில ஆலய அறக் கட்டளைகள் முன்பள்ளிகளை நிர்வாகிக்கின்றன. இப்படிப் பல முன்னுதாரணங்கள் உண்டு. சாமி தூக்குவதற்கு சம்பளம் கொடுக்கும் ஒரு சமூகத்திலே.த ிருவிழாக்களை ஒளி வெள்ளத்திலும் இசை வெள்ளத்திலும் மூழ்கடிக்கும் உபயகாரர்கள் மத்தியிலே மேற்கண்ட முன்னுதாரணங்களும் உண்டு

(18ம் பக்கம் பார்க்க)

EELANADU 04 Sep 2026 ஈழநாடு

# சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத ஒரு நாடு சர்வதேச நாட்களை எப்படி அனுஷ்டிக்கலாம்?

அண்மையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அமைப்பின் சார்பாக ஊடகங்கள் மத்தியில் பேசிய ஒரு பெண் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத ஒரு நாடு சர்வதேச நாட்களை எப்படி அனுஷ்டிக்கலாம்? என்று கேட்டிருந்தார்.

அவர் அவ்வாறு தெரிவிப்பதற்கு காரணம், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டவர் நினைவு நாளாகும்.அந்த நாள் சர்வதேச ரீதியாக இந்த மாதம் 30 ஆம் திகதி தான் அனுஷ்டிக்கப்படுகிறது. எனினும் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் ஆகிய ஓஎம்பி (OMP) அதனை கடந்த செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அனுஷ்டித்தது.அதற்கு எதிராக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளைச் சேர்ந்த அம்மாக்கள் யாழ் மாவட்டச் செயலக சூழலுக்குள் நின்று எதிர்ப்பு காட்டினார்கள். அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அம்மாக்களை போலீசார் பலத்தைப் பிரயோகித்து அங்கிருந்து அகற்றினார்கள். ஏற்கனவே உடலாலும் மனதாலும் நொந்துபோன பெண்களை பலத்தைப் பிரயோகித்து அகற்றியிருக்கிறார்கள். இது நடந்தபோது நீதி அமைச்சர் கச்சேரிக்கு உள்ளே காணப்பட்டார். கச்சேரிக்கு வெளியே நடப்பவற்றை அவர் கைபேசியில் நேரலையில் பார்த்ததாக ஒரு தகவல்

அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் என்று அழைக்கப்படுகின்ற ஓஎம்பியை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகள் ஏற்றுக் கொள்ளவில்லை. முதலாவதாக அந்த பெயரே ஒரு பிரச்சினை. யாரும் தாமாகக் காணாமல் போகவில்லை. அல்லது தாமாகத் தொலைந்து போகவில்லை.அ வர்கள் அரசியல் காரணங்களுக்காக காணாமல் ஆக்கப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். யார் என்று தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்கள். அல்லது சரணடையக் கொடுத்தவர்கள், சரணடைந்தவர்கள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இங்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பது தான் பொருத்தமான வார்த்தை. அந்த வார்த்தையிலேயே அரசியல் இகிறது.

இந்த இடத்தில் மற்றொரு வார்த்தை அரசியலை அதுவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களோடு தொடர்புடையது இங்கே ஞாபகப்படுத்தலாம். இது நடந்தது 2020க்கு முன்பு.நிலைமாறுகால நீதியின் கீழ் கிழக்கில் நடந்த ஒரு கருத்தரங்கில் பாண்டிருப்பைச் சேர்ந்த முதிய அம்மாக்கள் கொஞ்சம் பேர் வந்திருந்தார்கள். நீங்கள் எந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று கேட்டபோது அவர்கள் தாங்கள் பாண்டிருப்பு விதவையர் சங்கம் என்று சொன்னார்கள். தமது அமைப்புக்கு அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கம் என்று பெயர் வைக்கவில்லை. பாண்டிருப்புக் கிராமம் அங்குள்ள திரௌபதி அம்மன் கோவிலுக்காகப் பெயர் பெற்றது. அந்தக் கிராமத்தைச் சேர்ந்த அந்த முதிய அம்மாக்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக உருவாக்கிய அமைப்புக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு என்றுகூட பெயர் வைக்க முடியாத ஒரு பாதுகாப்பு பற்ற சூழலில் காணப்பட்டார்கள். அதாவது ஒரு அமைப்புக்கு வைக்கப்படும் பெயரே பிரச்சினையாக வரலாம் என்று பயம். இப்படித் தான் இருக்கிறது தமது உறவுகளைப் பறிகொடுத்த அம்மாக்களின் துயரம

இவ்வாறு தமது சங்கத்துக்கு பெயர் வைக்கும் விடயத்தில் கூட தற்காப்பு உணர்வோடு செயல்பட வேண்டியிருக்கும் ஒரு நாட்டில், ஐநாவில் ஒப்புக்கொண்ட பிரகாரம் நிலைமாறு கால நீதிச் செய்முறைகளின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பிற்கு அதை உருவாக்கிய காலத்தில் இருந்த ரணில்–மைத்திரி அரசாங்கம் "காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம்'' என்று பெயர் வைத்தது தற்செயலானது அல்ல.இப்படியாக அமைப்பின் பெயரில் தொடங்கி,அந்த அமைப்பின் செயற்பாடுகளின் மீதும் அம்மாக்களுக்கு அவநம்பிக்கை உண்டு. அந்த அமைப்பு சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினத்தை யாழ்ப்பாணம் கச்சேரியில் அனுஷ்டித்தபோது அம்மாக்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டினார்கள்.



வழமையாக கொழும்பில் நடக்கும் அந்த நிகழ்வை இம்முறை யாழ்ப்பாணத்தில் அமைச்சர்கள் சகிதம் அனுஷ்டிப்பது என்றும்,அதையும் அதற்குரிய சர்வதேச நாளில் செய்யாமல் ஐந்து நாட்கள் முன்னதாக அதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்களை குறிப்பாக நிவாரணம் வழங்கும் நிகழ்வின் பங்காளிகளாக மாற்ற வேண்டும் என்றும் நன்கு திட்டமிட்டு அந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப் பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் அம்மாக்களின் அமைப்புகள் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நாளை 30ஆம் திகதி அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வரும் ஒரு பின்னணியில், அந்த நாளை தவிர்த்து ஐந்து நாட்கள் முன்னதாக மேற்படி நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதா?

இந்த நிகழ்ச்சி தொடர்பாக நடந்த ஓர் ஊடகச் சந்திப்பில்த ான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதாவது சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளாத ஒரு நாடு சர்வதேச தினங்களை எப்படிக் கொண்டாடலாம் என்ற கேள்வி.

இது மிக ஆழமான ஒரு கேள்வி. இலங்கைத்தீவின் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் இன அழிப்பு வெளியுறவுக் கொள்கையை வெளிப்படுத்தும் ஒரு கேள்வி. போரை வெல்வதற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவை. தமிழ் மக்களைத் தனிமைப்படுத்துவதற்கு அல்லது தமிழ் மக்கள் மத்தியில் இருந்து போராட்டத்தைத் தனிமைப்படுத்துவதற்கு அவர்களுக்கு சர்வதேசம் தேவை. ஆனால் சமாதானத்திற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவையில்லை. அதாவது பொறுப்புக்கூறும் விடயத்ணையை தலையீட்டை அவர்கள் ஏற்கவில்லை.

இது அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கையில் உள்ள ஓர் அக முரண்பாடாகத் தோன்றலாம். இல்லை. அது அக முரண்பாடு அல்ல. அது மிகத் தெளிவான ஓர் இன அழிப்பு அரசியல் தமிழ் மக்களை அழிப்பதற்கு அவர்களுக்கு சர்வதேசம் தேவை. ஆனால் தமிழ் மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதற்கு அவர்களுக்குச் சர்வதேசம் தேவையில்லை. தமிழ்மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர்களுக்கு சர்வதேசம் தேவையில்லை.எங்கே சர்வதேசத்தை உள்ளே விட வேண்டும், எங்கே சர்வதேசத்தை எல்லையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் அவர்களிடம் மிகத்தெளிவான தெரிவுகள் உண்டு.அது முழுக்கமுழுக்க இன ரீதியிலான ஒரு தெரிவு

இப்பொழுது வழிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்திலும் அரசாங்கம் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் சர்வதேச தினத்தை கொண்டாடுகிறது. ஏன் கொண்டாடுகிறது? ஏனென்றால் சர்வதேச ரீதியாக ஓஎம்பியின் நம்பகத் தன்மையை பலப்படுத்துவதே அவர்களுடைய நோக்கம். ஓஎம்பி அரசின் முழுமையான ஆதரவோடு முன்னேற்றகரமான விதத்தில் இயங்கிவருகிறது என்று வெளி உலகத்துக்குக் காட்ட வேண்டும். அதன் மூலம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத் தன்மையை உலக அளவில் பலப்படுத்த வேண்டும்.

கடந்த 25ஆம் திகதி, பிற்பகல், யாழ் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வானது அமைச்சுமட்ட அதிகாரப்பூர்வ நிகழ்வாகும். நிகழ்வில் அமைச்சர்களும் உட்பட யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும் வட மாகாண ஆளுநரும் மாவட்டச் செயலர்களும் அரச உயர் அதிகாரிகளும் பங்குபற்றியிருக்கிறார்கள். இந்த நிகழ்வில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என்று கூறப்படுகின்ற சுமார் 352 குடும்பங்கள் கலந்து கொண்டதாக மாவட்டச் செயலகத்தின் செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவமுகாம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நீரிழிவுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களிடம் சென்று உதவித் தொகையை வழங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு பகுதியினர் தங்களோடு நிற்கிறார்கள், தங்களுடைய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்கிறார்கள், என்று காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கும் ஓஎம்பிக்கும் உண்டு.

அதன் மூலம் அவர்கள் சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கான கோரிக்கையை மழுங்கடிக்கலாம். நீதியா? நிவாரணமா? என்று கேள்வி வரும் பொழுது ஒரு சிறு தொகையினர் நிவாரணத்தின் பின் போகக் கூடிய வாய்ப்புகள் உண்டு. நிவாரணங்களின் பின் வருபவர்களைக் காட்டி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எல்லாருமே சர்வதேச விசாரணையை கேட்கவில்லை என்றுகூற அரசாங்கம் முயற்சிக்கும். மேலும் ஓஎம்பியின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் முழு அளவு உதவுவதன் மூலமும், செம்மணிப் புதைகுழியை அகழ்வாராட்சி செய்யத் தேவையான நிதியை தொடர்ந்து வழங்கி வருவதன் மூலமும் ,உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத் தன்மையை உலக அளவில் பலப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது தெரிகிறது.

அந்த ஏற்பாடுகளைப் புறக்கணித்த, எதிர்த்த அம்மாக்கள் மாவட்டச் செயலகத்தின் வாசலில் நடத்திய போராட்டம் தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் (20ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இந்திய உதவியுடனான திட்டங்களின் தாமதத்துக்கு நிதிப்பிரச்சனை மட்டும் தான் காரணமா?

பலாலி விமான நிலைய மேம்பாடு மற்றும் காங்கேசன் துறைமுக மேம்பாடு என்பவற்றின் தாமதம் தொடர்பாக அண்மையில் ஊடகர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பிமல் ரத்னாயக பதிலளிக்பையில் குறை நிரப்பு நிதி மற்றும் எதிர்காலப் பராமரிப்பு பிரச்சினைகளே காரணம் என்று கூறியதுடன் தெற்கில் மத்தள விமான நிலையம் மற்றும் ஹம்பாந் தோட்டை துறைமுகம் போன்றவற்றுக்கு ஏற்பட்ட நிலைமை வடக்கிலும் ஏற்படுவதற்கு அனுமதிக்க முடியாது என்றும் கூறியிருந்தார்.

இந்தியாவின் உதவியுடனான மேற்குறித்த திட்டங்களின் தாமதத்துக்கு உண்மையில் அவர் கூறியவை தான் காரணமா? அல்லது அதன் பின்னால் வேறு காரணங்களும் உள்ளனவா? அவர் கூறியவாறு மத்தள விமான நிலையம் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை இத்திட்டநங்களுக்கும் ஏற்படக்கூடிய வாய்ப்புகளுள்ளதா?

அமைச்சர் கூறியது போல இன்றைய பொருளாதார நிலையில் இலங்கைக்கு நிதி ஒரு பிரச்சினையாக இருந்தாலுங் கூட அதைவிட வேறுபல காரணிகளே இத்திட்டங்கள் தாமதமடைவதில் கூடியளவு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதே உண்மை நிலையாகும். அமைச்சரின் கடந்த கால அணுகுமுறைகள், இந்தியா தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு, வடக்குத் தொடர்பாக இந்த அரசாங்கம் உட்படத் தெற்கு ஆட்சியாளர்களின் வழமையான நிலைப்பாடுகள் போன்றனவே இத்திட்டங்களின் தாமதத்தில் அதிகளவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக உள்ளன.

சுங்கப் பரிசோதனையின்றி 323 கொள்கலன்கள விடுவித்தமை ஒரு காரணமாக இருந்தாலுங் கூட இத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சரின் இறுக்கமான நிலைப்பாடு, அதனடிப்படையலமைந்த அவரது எதிர்மறையான வெளிப்பாடுகள் என்பவற்றினால் ஏற்படுத்தப்பட்ட இந்தியாவின் அழுத்தமே அவரிடமிருந்து துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து ஆகிய துறைகள் பறிக்கப்படக் காரணமாக இருந்தன என்பதே உண்மை நிலையாகும்.

பிமல் ரத்னாயக ஜே.வி.பியின் அடிப்படைக் கொள்கைகளில் ஊறிய மூத்த உறுப்பினர் ஒருவர். இந்திய எதிர்ப்பு ஜே.வி.பியின் பிரதான கொள்கைகளில் ஒன்று. ஜனாதிபதி அனுர தன்னை ஒரு மிதவாதியாகத் தற்போது காட்டிக் கொண்டாலும் அவரும் ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்புக் கொள்கையில் ஊறிய ஒருவர் தான். நாட்டின் இன்றைய தேவைகள் காரணமாக அந்நாட்டுடனான உறவை வளர்க்கிறாரா அல்லது உண்மையான மனமாற்றமா என்பதை எதிர்காலம் தான் கூறும்.

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்கவும் ஆட்சியைத் தொடர்ந்து தக்க வைக்கவும் இந்திய அனுசரணை இன்று இலங்கைக்கு அத்தியாவசியமானதொன்று. இதன் காரணமாக இந்தியாவுடன் தவிர்க்க முடியாத வகையில் இயன்றவரை சமரசப்போக்கை அரசாங்கம் இப்போது கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. இருப்பினும் இந்தியா தொடர்பாக வடக்கிற்கு வெளியே ஓரளவு தாராளப் போக்கைக் கடைப்பிடித்தாலும் வடக்கில் எச்சரிக்கையுடன் அணுகுவதற்கே அரசாங்கம் விரும்புகிறது. வடக்கில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பதை அரசாங்கம் உள்ளூர விரும்பவில்லை. இதனால் தான் இவ்வாறான திட்டங்களை மறுப்பதற்குப் பதிலாக அதிக அக்கறை செலுத்தாது தாமதப்படுத்தி வருகிறது.

இது தொடர்பாக இலங்கைக்கு வருகை தரும் இந்தியத் தலைவர்கள் வெளிப்படையாகவே தங்கள் கவலையைத் தெரிவிப்பதைக் காண முடிகிறது.

கிறது. அதன் மூலம் வடக்கை தாம் நினைத்தவாறு கட்டுப்படுத்த முடியும் என்று அது கருதுகிறது.

அதனால் வடக்கின் விருத்திக்கான அடிக்கட்டுமானங்களை விடுத்து வழமையான முறையில் சில மேம் போக்கான திட்டங்களை மேற்

இந்தியாவின் பரிசீலனையில் இன்னுமிருக்கிற சேது கால்வாய்த்திட்டம் எதிர்காலத்தில் செயற்பாட்டுக்கு வருமாயின் காங்கேசன் முக்கிய துறைமுகமாக மாறுவதற்கான வாய்ப்பும் உள்ளது.

அதேபோலவே பலாலி விமான நிலை




அமைச்சரின் கருத்தின்படி இத்திட்டங்களுக்கான மொத்தச் செலவில் பெரும்பகுதியை இந்தியா வழங்கினாலும் மீதியை இலங்கை பொறுப்பேற்க வேண்டியுள்ளதால் நிதிப் பிரச்சினை காணப்படுகிறது என்பது ஏற்கக் கூடியதே. எனினும் முதலில் சலுகைக்

கொள்வதன் மூலம் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவே இந்த அரசாங்கமும் விரும்புகிறது.

பலாலியும் காங்கேசன்துறையும் மத்தள மற்றும் ஹம்பாந்தோட்ட போல எதிர்காலத்தில் நாட்டுக்குச் சுமையானவையாக மாறிவிடுமா?


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
-க. அருந்தவபாலன் -

யத்தினூடான வெளியுலகப் போக்குவரத்து அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன. தற்போது இந்தியாவுடன் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் நடைபெறுகின்ற பலாலி விமானப் போக்குவரத்து விரிவடைவந்து வருவதும் விமான நிலையத்தின் நிகர இலாபம் அதிகரித்து வருவதும் இதனை எடுத்துக் காட்டும். இலங்கையின் இரண்டாவது பெரிய சர்வதேச விமான நிலையமாக பலாலியை மாற்ற முடியும். எதிர்காலத்தில் இதனை அரசாங்கம் சுமையாகக் கருதுமானால் ஹம்பாந் தோட்டை போன்றல்லாது வடக்கின் இவ்விரு திட்டங்களையும் இந்திய அரசு அல்லது இந்திய நிறுவனங்கள் விருப்பத்துடன் பொறுப்பேற்குமென

கடனாக அறிவித்து பின்னர் அதை மானியமாக வழங்குவதற்கு முன்வந்த இந்தியாவிடம் மீதியைக் கடனாகப் பெறுவதற்கு முயற்சித்திருக்கலாம். அல்லது ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வேறு நிதிமூலங்களை நாடி இருக்கலாம். மேலாக மத்திய விரைவு நெடுஞ்சாலை உட்பட வேறு பல அபிவிருத்தித் திட்டங்களை தமது சொந்தச் செலவில் மேற்கொள்வதாக மார்தட்டிக் கொள்ளும் அரசாங்கம் இத் திட்டங்களுக்கான குறைநிரப்புச் செலவையும் அவ்வாறே ஒதுக்குவதற்கு முயன்றிருக்கலாம். ஆனால் அதற்கு மனமில்லாதிருப்பது அரசாங்கத்தின் உள்நோக்கத்தைக் உறுதிப்படுத்தவதாகக் கருத இடமுண்டு.

வடக்கில் இந்தியாவின் செல்வாக்கு அதிகரிப்பதை விரும்பாமை ஒருபுறமிருந்தாலும் வடக்கு அபிவிருத்தியடைவதையோ, வடக்கு மக்கள் செழிப்படைவதையோ தெற்கு ஆட்சியாளர் எவரும் விரும்புவதில்லை என்பதே இந்நாட்டின் வரலாறு. இனப் பிரச்சினக்கான தோற்றுவாய்களில் இதுவும் ஒன்று. இதில் அனுர அரசாங்கமும் விலக்கல்ல.

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகம் என்பவற்றை மேம்படுத்துவது வடக்கின் விருத்திக்கு உந்துசக்தியாக அமையும் என்பது நிச்சயமானது. அது மட்டுமன்றி இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான தரை வழிப்பாதை கூட வடக்கில் சுற்றுலாத்துறை உட்பட பல்வேறு துணைச்சேவைகளை வளர்ச்சியடையச் செய்யும். இவ்வாறு வளர்ச்சியடைவதை தெற்கு ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை. ஏனெனில் எப்போதும் எல்லாவற்றிலும் வடக்கு தம்மில் தங்கியிருக்க வேண்டுமென்று தெற்கு விரும்பு

ஒப்பீட்டு ரீதியில் அத்தகைய நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவென்று எதிர்வுகூற முடியும். புவியியல் அமைவிடம், அதனால் ஏந்தும் பிரதேசத்தின் அளவு, கையாளக்கூடிய பொருளாதார நடவடிக்கைகள், இந்தியாவின் ஆதரவு போன்ற பல விடயங்களில் இத்திட்டங்களில் தெற்கை விட வடக்கு மேம்பட்டதாகக் காணப்படுகிறது. அமைவிட ரீதியாகப் பார்த்தால் நாட்டின் பிரதான துறைமுகம் மற்றும் விமான நிலையங்களுக்கும் ஹம்பாந்தோட்டை மற்றும் மத்தள அமைவிடங்களுக்களுக்கும் இடையிலான தூரம் மிகக்குறைவானது. இரு அமைவிடங்களுக்கும் இடையிலான தூரம் 246 கிலோமீற்றர் மட்டுமே. ஆனால் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான தூரம் 404 கிலோமீற்றர். கொழும்பிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கான பயணநேரம். 3 1-2 மணித்தியாலங்களாக இருக்க காங்கேசன்துறைக்கான நேரம் 8 மணித்தியாலங்களாக உள்ளன.


வடக்கின் இவ்விரு திட்டங்களுக்கான ஏந்தும் பிரதேசம் அதாவது பயனடைக்கூடிய பிரதேசத்தின் அளவு வடக்கு மாகாணந்தாண்டி வடமத்திய மாகாணத்தின் பலபகுதிகளுக்கும் விரிவடைவதற்கான வாய்ப்புக் காணப்படுகிறது. மேலும் இலங்கையின் பிரதான வர்த்தகப் பங்காளியாக இந்தியா உள்ளது. இந்தியாவின் கிழக்குத் துறைமுகங்களிலிருந்து மட்டுமன்றி தென்கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்தும் கொழும்புத் துறைமுகத்துக்கான பயணநேரத்தை விட காங்கேசன் துறைக்கான பயணநேரம் குறைவானது. இதனால் போக்குவரத்துச் செலவு குறைவடையும்.

நம்பமுடியும். ஆனால் அதனை இலங்கை அரசாங்கம் விரும்ப வேண்டுமே.


இவ்விரு திட்டங்களிலும் அரசாங்கம் பின்னடிப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. அதுதான் அரசாங்கத்தினால் உச்சரிக்கப்படும் தேசிய பாதுகாப்பு. தேசிய பாதுகாப்பு என்ற பெயரிலேயே இன்று வலி வடக்கின் பெரும்பகுதி முப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அதனுள்ளேயே பலாலியும் காங்கேசன் துறையும் அடங்குகின்றன. சட்டரீதியாக உயர் பாதுகாப்பு வலயம் என்பது நீக்கப்பட்டாலும் கூட அங்கு வாழும் குடிமக்கள் முப்படைகளின் நெருக்கமான கட்டுப்பாடுகளால் சூழப்பட்டே உள்ளனர். துறைமுகம் மற்றும் விமான நிலையம் விரிவு படுத்தப்படுமானால் தற்போதைய கட்டுப்பாடுகளை முப்படைகளும் தளர்த்த வேண்டிய நிலை ஏற்படுவதுடன் தமக்கான எல்லைகளைச் சுருக்க வேண்டிய நிலையும் உருவாகும். அதுமட்டுமன்றி காணிகளின் பெறுமதி அதிகரிக்க முப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களின் அழுத்தம் மேலும் கூடும். இதனால் பொல்லைக் கொடுத்து அடிவாங்க வேண்டுமா என அரசாங்கம் சிந்திப்பதும் இத்திட்டங்களின் தாமதத்திற்கு இன்னொரு காரணியாக இருக்கலாம்.

இவை சிலருக்கு குறிப்பாகப் வடக்கின் புதிய தோழர்களுக்கு கற்பனையானதாக அல்லது மிகைப் படுத்தப்பட்டதாகத் தோன்றக்கூடும். ஆனால் இவை கற்பனையல்ல நிசம் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள இன்னும் சிறிது காலம் எடுக்கும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.





ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.





கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல்திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ் தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக் கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.








தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சாதி தூக்கச் சம்பளம் கொடுக்கும் ஒரு சமூகத்தில்

(15ம் பக்கத் தொடர்ச்சி) கோவில் நிர்வாகங்கள் ஆலய அறக்கட்டளைகள் போன்றன அவற்றின் பிரயோக அர்த்தத்தில் உள்ளூர் தலைமைத்துவம் தான். லோக்கல் லீடர் ஷிப் லோக்கல் லீடர்ஷிப் பலமாக இல்லையென்றால் கீழிருந்து மேல் நோக்கி தேசிய மட்டத் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இதை மறுவளமாக விளங்கப்படுத்தினால், அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை என்றால் உள்ளூர் தலைமைத்துவத்துக்கும் இரண்டாம் மூன்றாம் கட்டத் தலைமைத்துவத்துக்கும் முன்னுதாரணம் இருக்காது. ஆதர்சங்கள் இருக்காது.

ஈழத் தமிழ்ச் சமூகத்தில் அது தான் இப்பொழுது நடக்கின்றது. பெரிய கட்சி தனக்குள் தானே பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் நீதிமன்றத்தின் நிற்கிறது. அது அடுத்தடுத்த மட்டத் தலைமைத்துவங்களுக்கு முன்னுதாரணமாக இல்லை. அதே போல சில ஆலய அறக்கட்டளைகளும் திருச்சபைகளும் நீதிமன்றத்தில் நிற்கின்றன. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி''.

# காணாமல் ஆக்கப்பட்டவருக்கு நீதி?

(12ம் பக்கத் தொடர்ச்சி) அந்த அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை அவரை விட வேறு எந்த ஜனாதிபதியும் கொடுத்து விடவும் முடியாது. ஆனால் அது நடக்குமா? அவருடைய அமைச்சரவையில் உள்ள நீதி அமைச்சர் கூறுகிறார்,. குற்றவாளிகள் இனம் காணப்பட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்று. ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு அனுர அசோசியேட்டட் நியூஸ் பிரஸ் ஊடகத்துக்கு வழங்கிய ஒரு செவ்வியல் சொன்னார், பாதிக்கப்பட்ட மக்கள் உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று தான் கேட்கின்றார்களே தவிர, குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்று.

உண்மையைக் கண்டு பிடிப்பது என்றால் என்ன? குற்றவாளியைக் கண்டு பிடிப்பது. குற்றவாளியை ஏன் கண்டு பிடிக்க வேண்டும்? விசாரித்து தண்டிப்பதற்குத் தானே? ஏன் தண்டிக்க வேண்டும்? குற்றச்செயல்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்கு. ஆனால் அனுர கூறினார், பாதிக்கப்பட்ட மக்கள் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்கவில்லை என்று.

ஏன் அப்படிக் கூறுகிறார்? அவர் தன்னுடைய சொந்த அனுபவத்தில் இருந்து கூறுகிறாரா? இப்பொழுது ஆட்சி செய்யும் தேசிய மக்கள் கட்சி அரசாங்கத்தின் இதயமாக இருப்பது ஜேவிபி. அதன் தோழர்களும் தோழிகளும் ஆயிரக்கணக்கில் கொடூரமான முறைகளில் காணாமல் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீதிகேட்டு ஜேவிபி எத்தனை வழக்குகளைத் தொடுத்திருக்கிறது?

காணாமல் ஆக்கப்பட்ட தன் தோழர் தோழியர்களுக்காக ஜேவிபி நிர்ணயகரமான விதங்களில் போராடவில்லை. தொடர்ச்சியாகப் போராடவில்லை நீதி கிடைக்கும் வரை போராடவில்லை. இப்பொழுது ஆளும் கட்சியாக இருந்து கொண்டும் கடந்த இரண்டு ஆண்டுகளாக தன் தோழர் தோழியர்களின் கொடுஞ்சாவுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவில்லை. ஏன் ?

ஏனென்றால் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஜேவிபி யுத்த வெற்றியின் பங்காளியாக இருந்தது. யுத்த வெற்றியைக் கொண்டாடியவர்கள் மத்தியிலும் காணப்பட்டது. யுத்த வெற்றியின் நாயகர்களாகக் கொண்டாடப்படும் படைத் தரப்புக்கு இப்பொழுது அனுர முப்படை தளபதியாக இருக்கிறார். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் விசாரணைகளைத் தொடங்கினால் குற்றம் சாட்டப்படப் போவதும் விசாரிக்கப்படப் போவதும் அந்தப் படைத் தரப்புத்தான். யாரை வெற்றி நாயகர்களாக அவர்கள் கொண்டாடுகிறார்களோ, அவர்களையே விசாரிக்கவும் தண்டிக்கவும் வேண்டி வரலாம். எனவே தமது யுத்தவெற்றி நாயகர்கள் தண்டிக்கப்படுவதை ஜேவிபி விரும்பவில்லை என்று எடுத்துக் கொள்ளலாமா? யுத்த வெற்றியைப் பாதுகாப்பதா? அல்லது தம் தோழர் தோழியர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதா? என்ற இரண்டு எதிர்ப் புள்ளிகளில் ஜேவிபியின் தெரிவு என்ன? இதுதான் நிலைமையென்றால் செம்மணியுமுட்பட புதை குழிகளுக்கும் இதுவரையிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் இந்த அரசாங்கம் நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என்று எந்த அடிப்படையில் நம்புவது?

# எமது தொல்லியல் மரபுரிமை அடையாளங்களை...

(23ம் பக்கத் தொடர்ச்சி) வருவது மிகமிகக் குறைவு. உதாரணமாக நாங்கள் மந்திரி மனை இருந்த பிரதேசம் 2010ஆம் ஆண்டு தொல்லியல் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டு அதற்கான விளம்பரப் பலகைகளும் அதிலே போடப்பட்டது. ஆனால் அதை மீளுருவாக்கம் செய்வதற்கு நாம் முயற்சி செய்த போது, அந்தக் காணியை தமக்குரியதென்று மூவர் உரிமை கோரினார்கள்.

நில உரிமையாளரின் அனுமதியின்றி ஒரு மரபுரிமைச் சினன்த்தை நாங்கள் கட்டாயமாக பாதுகாப்பதென்பது பிரச்சினைக்குரிய விடயமாகும். அவர் நீதிமன்றத்தின் உதவியை நாடுவாராக இருந்தால் அது தடையாக இருக்கும். உதாரணமாக கோட்டையில் சங்கிலியன் கோட்டை என்னும் ஒரு இடம் இருந்தது. பல்கலைக்கழகத்தில் நிதியுதவியைப் பெற்று அதை ஆய்வு செய்வதற்கு முற்படுகின்ற போது, வெளிநாட்டிலுள்ளவர் அதற்குரிய அனுமதியைப் பெறாததனால் தொல்லியல் திணைக்களம் அந்த இடத்தில் ஆய்வு செய்வதை நிறுத்தியிருந்தது.

அப்படியான சில பிரச்சினைகளும் உண்டு. ஆனால் உங்களுடைய பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு பல வழிமுறைகள் உண்டு. ஒரு பிரதேச சபையிலே பருத்தித்துறையில் உள்ள வெளிச்ச வீட்டை பராமரித்து பாதுகாத்து சுற்றுலா இடமாக பிரதேச சபை செய்யலாம். எங்கள் யாழ்ப்பாண மாநகரசபை சரியான ஒரு திட்டமிடலோடு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு யாழ்ப்பாண கோட்டையைக் கூட தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ஒரு சுற்றுலா மையமாக மாற்றலாம்.

சில அரசியல் சிக்கல் தடைகள் இருந்தாலும் அந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு என்று தான் நான் கருதுகின்றேன். இப்படியான முயற்சிகளுக்கு வெளிநாட்டிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் உதவலாம்.

அந்த உதவிகள் வந்து அரசிற்குத் தெரியக்கூடிய வகையில் ஒரு பல்கலைக் கழகத்தின் ஊடாக அரசாங்க அதிபர் ஊடாக பிரதேச செயலாளர் ஊடாக, பொது அமைப்பின் ஊடாக அனுமதி பெற்று செய்வதில் தடைகள் இல்லை என்பது எனது கருத்தாகும்.

# தமிழ் அரசியலில் தலைமைத்துவ வெற்றிடம்!

## விவாதத்திற்கான சில குறிப்புக்கள் - 05

கட்டுரையாளர்:
- கருணாகரன் -

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஈழத் தமிழரின் அரசியலில் உள்ள தலைமைத்துவ வெற்றிடத்தை எவ்வாறு நிரப்புவது, அல்லது புதிய தலைமைத்துவத்தை எவ்வாறு உருவாகுவது என்று பலரும் சிந்திக்கிறார்கள் என்பதைப் பார்த்தோம். இருக்கின்ற அரசியல், சமூகத் தலைமைகளில் உள்ள நிறைவின்மை, நம்பிக்கையின்மையே இதற்குக் காரணமாகும். ஆகவே தான் அவர்கள் புதிய தலைமை ஒன்றை அல்லது மாற்றுத் தலைமையை விரும்புகிறார்கள்.

இதற்கு இரண்டு வழிகளில் தீர்வைக் காண முடியும். முதலில் இருக்கின்ற தலைமைகளில் மக்களுக்கு ஏன் நம்பிக்கையில்லை? என்றால்,

1. இந்தத் தலைமைகள் மக்களுக்குரிய மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய அளவுக்குக்கூட வினைத்திறனுள்ளவையாக இல்லை. தாம் இதுவரையில் முன்மொழிந்த, பிரகடனப்படுத்திய எந்தவொரு வேலையையும் சரி, அறிவிப்புகளையும் சரி முன்னோக்கிய செயற்பாடாக உருவாக்கியதும் இல்லை. அவற்றில் சிறிய நல்விளைவுகளை உருவாக்கியதும் இல்லை.

2. 75 ஆண்டு காலமாக நீடிக்கும் இன ஒடுக்குமுறைக்கும் அரசியற் பிரச்சினைக்கும் உரிய யதார்த்தமான தீர்வைக் காணக் கூடிய அறிவையும் உணர்வையும் இவை கொண்டிருக்கவில்லை.

3.தம்முடைய நிலைமை, தமது பலம், பலவீனம் போன்றவற்றை மதிப்பிடவும் தமக்கு முன்னுள்ள சாவல்களையும் மதிப்பிடும் உள நிலையும் ஆற்றலும் இல்லாதவையாக உள்ளன.

4. ஈழ விடுதலை அரசியலும் அதற்கான போராட்டமும் அது உண்டாக்கிய போரும் தோற்றுப்போன நிலையில் அதற்கு அடுத்தகட்டாமாக எத்தகைய அரசியல் முன்னெடுப்பைச் செய்ய வேண்டும்? எவை யதார்த்தமானவை என்பதையெல்லாம் அறிவுபூர்வமாக அணுகக் கூடிய திராணியை இவை கொண்டிருக்கவில்லை. என்பதால் தான் கடந்த கால தோற்றுப்போன அரசியலையும் அதற்கான சொற்களையும் மந்திரம் போல உச்சாடனம் செய்கின்றன.

5.ஈழத் தமிழரின் அரசியலில் செல்வாக்குச் செலுத்திய விடுதலைப்புலிகளின் யுகம் முடிந்து விட்டது. அதற்கான பெறுமதிகள் அன்றைய வரலாற்றுக்குரியவையே தவிர, இப்போதுள்ள யதார்த்தத்துக்கும் எதிர்கால வழிமுறைகளுக்கும் அவை பொருந்தக் கூடியன அல்ல என்ற உண்மையை விளங்கிக் கொண்டு செயற்படும் நிலை துணிச்சல் இவற்றிடம் இல்லை.

6.அரசியல் தீர்வும் தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றமும் பாதுகாப்பும் தனியே தமிழர்களுடன் சம்பந்தப்பட்டதல்ல. அது பிற சமூகங்களான முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள், சிங்களச் சமூகத்தினரோடும் இணைந்தே உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டு செயற்படும் தன்மையும் புரிந்துணர்வும் இல்லை. இதனால் ஏனைய சமூகங்களுடனான ஊடாட்டங்களை இவை செய்யாமல் உள்ளன. அப்படிப் பிற சமூகங்களோடு உறவு கொள்வோரை துரோகிகளாகச் சித்தரிக்கும் மூட அரசியலில் புதையுண்டிருப்பது.

7.யதார்த்தம், உண்மை நிலை போன்றவற்றைப் புரிந்து கொண்டாலும் அதை ஏற்றுப் பொதுவெளியில் கருத்துரைக்கும் திராணியற்ற நிலையில் உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் மாறான அரசியல் பிரகடனங்களில் சிக்குண்டிருப்பது. இது தொடர் தோல்விகளைத் தந்தாலும் மக்களுக்கு யதார்த்த நிலை என்னவென்று தெரிந்தாலும் அதை வெளிக்காட்டவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாமல் தத்தளிப்பது.

8.அரசியல் நிலைப்பாடுகளையும் அணுகு முறைகளையும் புரிந்து கொள்ளத் தவறியுள்ளமை. இதனால்



எத்தனை சந்திப்புகள், உரையாடல்களைச் செய்த பின்னும் குறித்த விடயங்களில் எத்தகைய முன்னேற்றங்களும் ஏற்படாதிருக்கும் தோல்விகள்.

9. தமது கட்சிக்குள்ளும் வெளியிலும் தலைமைத்துவம் குறித்த உரையாடல்களையும் புதிய அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சூழலையும் பேசுவதற்கோ, நிகழ்த்துவதற்கோ தயக்கம் காட்டுகின்றமை.

10.இவ்வாறான விடயங்களைப் பலரும் பல தடவை சுட்டிக்காட்டிப் பேசினாலும் அதைப் புரிந்து கொள்ளவோ, ஏற்றுக் கொள்ளவோ தயாரற்றிருக்கும் நிலை.

இவை போன்ற காரணங்களால் மக்கள் இன்றிருக்கும் தமிழ் அரசியல் தலைமைகளில் நம்பிக்கையீனம் கொண்டுள்ளனர். இதை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு குறித்த தலைமைகளுக்குண்டு. அல்லது அவை புதிய தலைமைகளைக் குறித்து தமது கட்சிகளுக்குள் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் அப்பால், கட்சிகள் தமது தலைமைகளுக்கு எதிராகவே அவமதிப்புகளைச் செய்கின்றன. ரெலோவுக்குள்ளும் தமிழரசுக் கட்சிக்குள்ளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொதிநிலையும் மோதல்களும் அணிப் பிளவுகளும் அவற்றின் அடியான வசைபாடல்களும் இதற்கு உதாரணம். ஏறக்குறைய தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் பிளவுண்ட மணிவண்ணன் அணியும் கூட இப்படித் தான் உள்ளது. ஏனைய கட்சிகளும் ஏறக்குறைய இதே நிலையில் தான் உள்ளன.

ஆகவே இதையெல்லாம் சரிப்படுத்தி, ஒரு புதிய தலைமையை பெருந்திரள் மக்களுடைய மதிப்புக்கும் அங்கீகாரத்துக்கும் உரியவாறு கொண்டு வருதல் என்பது எளிதானதல்ல. ஆனால் அதைச் செய்தே தீர வேண்டும். வேறு வழியில்லை. இதற்கு கட்சிக்குள்ளும் வெளியிலும் ஜனநாயகத் தன்மையைப் பேணுவது அவசியம். அதுவே ஒரு சிறந்த தலைமைத்துவத்துக்கு அழகு, சிறப்பு. பொருத்தம்.

தேசியத் தலைமைத்துவம் என்பது கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதல்ல அவற்றை ஜனநாயக ரீதியில் கையாள்வதாகும். விமர்சனங்களைக் கேட்கும் மனப்பக்குவம், மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் பண்பு, அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் மனநிலை, பெண்கள், இளைஞர்கள், சிறுபான்மைக் குழுக்கள் ஆகியோருக்கான சமமான அரசியல் வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் அணுகுமுறை ஆகியவை ஒரு முதிர்ந்த தலைமைத்துவத்தின் அடையாளங்களாகும். இதனை இன்றைய எந்தத் தமிழ்த் தலைமை கொண்டுள்ளது?

அச்சத்தால் உருவாகும் ஒற்றுமை தற்காலிகமானது. நம்பிக்கையால் உருவாகும் ஒற்றுமையே நிலையானது. இதனை நாம் நமது கடந்த கால போராட்ட வரலாற்றிலும் இயக்க அரசியல் வரலாற்றிலும் தெளிவாகக் கண்டிருக்கிறோம். ஆனாலும் இன்னும் மயக்க நிலை மாறவில்லை. இப்போதும் ஏனையோரைக் கட்டுப்படுத்தித் தமது தலைமைத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கே ஒவ்வொரு தலைமையும் முயற்சிக்கின்றன. இது ஒரு ஆழமான குற்றச்சாட்டுத் தான். ஆனால், இதை ஒளிக்காமல் சொல்லியே ஆக வேண்டியுள்ளது. இந்த நிலை தொடர்வதால் தான் இந்தத் தலைமைகள் மக்களின் தலைமைகளாக முடியாமல், கட்சிகளின், அணிகளின் தலைமையாக இருக்கின்றன. இதற்குக் காரணம், பொது நலனைக்குறித்த அக்கறையை விட, தங்களின் தனிநலன், தனி அடையாளம், தன்னிருப்புப்பற்றிய உளவியற் சிக்கல்களேயாகும்.

ஒரு உண்மையான தலைவர் தனது வாழ்நாளில் எத்தனை பதவிகளை வகித்தார் என்பதனால் மதிப்பிடப்படுவதில்லை. அவர் தன்னைத் தொடர்ந்து இயங்கக்கூடிய எத்தனை நிறுவனங்களை உருவாக்கினார் என்பதாலேயே மதிப்பிடப்படுகிறார். மக்களுடன் எவ்வாறான உறவுகளைக் கொண்டிருக்கிறார், தன்னுடைய தலைமைத்துவத்தினால் எத்தகைய நல்விளைவுகளை அடையாளமாகக் காட்டக் கூடியதாக இருக்கிறார் என்பதால் தான் விளங்கப்படுவார். தவறுகளை இழைக்காத அமைப்போ, இயக்கமோ, கட்சியோ, தலைமையோ இல்லை. ஆனால், அந்தத்தவறுகளையும் விட முற்போக்கான, சிறப்பான, பயனுள்ள நல்விளைவுகளை உருவாக்கினால், மக்கள் அவற்றையே நினைவில் கொள்வர். அதை நோக்கிச் சிந்திக்கவும் செயற்படவும் கூடிய எண்ணமும் செயற்திறனும் இன்றுள்ள கட்சிகளிடம் உண்டா?

அது மட்டுமல்ல, நிரந்தரமான கொள்கை ஆய்வு மையங்கள், தலைமைத்துவப் பயிற்சி நிறுவனங்கள், அரசியல் கல்வி மையங்கள், இளைஞர் வளர்ச்சி அமைப்புகள், பொருளாதார ஆய்வு மன்றங்கள், சர்வதேச உறவுகளுக்கான நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்கும் திறன் ஒரு தலைமைத்துவத்திற்கு அவசியமானது.

தனிநபர்களை மையமாகக் கொண்ட அரசியல் மறைந்து போகலாம் ஆனால் நிறுவனங்கள் தலைமுறைகளைக் கடந்து சமூகத்தை வழி நடத்தும். இதையும் நாம் நம்முடைய சமகால வரலாற்றில் கண்டறிந்துள்ளோம்.

(அடுத்தவாரமும் வரும்)

# தமிழ் இசட் தலை முறையினர் (Genz) எங்கே?




அண்மையில் இந்தியாவில் இடம் பெற்ற கரப்பான் பூச்சி இளைஞர்களின் நடவடிக்கைகள் உலகின் கவனத்தைப் பெற்றிருந்தது. அவர்களின் நடவடிக்கையால் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி, ஒரு படி கீழே இறங்கி வந்தது. கடந்த பன்னிரெண்டு வருடங்களில் பாரதிய ஜனதா கட்சி இப்படி இறங்கி வந்தது இது தான் முதல் தடவை. பங்களாதேஸின் பலம் பொருந்திய ஷேக்ஹசினாவின் ஆட்சியை கவிழ்த்தமை, நேபாளத்தில் ஆட்சியை கைப்பற்றியமை, இலங்கையின் ஆட்சி மாற்றம் இவையெல்லாம் இசட் தலைமுறையினரின் அரசியல் பிரவேசம் தொடர்பில் சிலாகித்துக் கூறப்படும் விடயங்கள்.

இப்படியான மக்கள் கிளர்ச்சி ஒன்று இந்தியாவிலும் சாத்தியமாகுமா என்னும் கேள்விகளை, சில சர்வதேச ஊடகங்கள் முன் வைத்திருந்தன. இதனை இந்தியாவின் இசட் கிளர்சி என்றே சர்வதேச ஊடகங்கள் வர்ணித்தன. இத்துத்வாவின் வீழ்சியை காண ஆசைப்படும் பலரிடம் இப்படியான தாகம் தெரிந்தது. அதுவே சர்தேச ஊடகங்களில் பிரதிபலித்தது.

ஆனால் இந்தியா இலங்கையோ, நேபாளோ அல்ல அது இந்தியா. நூற்றி ஐம்பது கோடி மக்களைக் கொண்ட நாடு. ஒரு மானிலம் இன்னொரு மானிலத்திற்காக குரல் கொடுக்காத அரசியல் சூழல். அப்படியான தேசத்தில் மாணவர் கிளர்ச்சிகள் மூலம் ஆட்சியை கவிழ்க்க முடியுமா? இப்படியான யதார்த்தம் இருந்த போதிலும் கூட, மோடி அரசாங்கம் சற்று கீழிறங்கி மாணவர்களை கையாள முற்பட்டது. மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆதரவான அலையை கீழிறக்கியது. இந்தியாவிற்கு எதிரான சக்திகள் இதனை பயன்படுத்தி விடக் கூடாது என்பதிலேயே இந்திய அரசு கவனம் செலுத்தியது.

இலங்கையிலும் கோட்டபாய ராஜபக்சவின் பலமான ஆட்சியை மக்கள் கிளர்ச்சியே வீழ்த்தியது. எந்த சிங்கள மக்கள் – முக்கியமாக சிங்களத் தேசிய மனோநிலை கொண்டிருந்த புலிகளின் தோல்வியை கொண்டாடிய, மத்திய தரவர்க்கமே இறுதியில், ராஜபக்சேக்களின் குடும்ப அதிகாரத்தையும் சரித்தது. ஆனால் இவ்வாறான கிளர்சிகள் அரிதாகவே நிகழும். இவற்றை சாத்தியப்படுத்துவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன், இவ்வாறான கிளர்ச்சிகளுக்கு பின்னால் வெளித் தரப்புக்களின் தலையீடுகள் இருக்கின்றன. அவை தொடர்பில் நம்மால் துல்லியமாக விவாதிக்க முடியாவிட்டாலும் கூட, அவற்றுக்கான வாய்ப்பு அதிகம்.

இலங்கையின் கிளர்ச்சிக்கு பின்னால் அமெரிக்க உளவுத் துறை இருந்ததாகவே கோட்டபாய நம்பியதாக சில சிங்கள ஆய்வாளர்கள் எழுதியிருக்கின்றனர். அமெரிக்காவிற்கு அப்படி என்ன ஆர்வம் இருந்தது அது உண்மை தானா என்னும் கேள்விகளுக்கு பதில் இல்லை ஆனால் ஒரு கிளர்ச்சிக்கான சூழல், உள்நாட்டில் தான் கருவுறும். அந்தக் கருவை பேணிப் பாதுகாத்து, அதற்கு வடிவம் கொடுப்பதற்கு ஆதரவுகள் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை தான். ஏனெனில் இதற்கு உலகில் பல உதாரணங்கள் உண்டு.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், அறகலய என்னும் பெயரில் ஒரு மக்கள் திரட்சி திடிரென்று வந்து விட வில்லை. சிலரால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் படிப்படியாகப் படர்ந்து இறுதியில் ஒரு பெரும் திரட்சியாக வடிவம் பெற்றது. இது ஏனைய தெற்காசிய நாடுகளின் கிளர்சிக்கு உந்துசக்தியாகவும் மாறியது. ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு வழிமுறை, வெளித் தரப்புக்களின் ஒரு உக்தியாக இருந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒரு ஆட்சியாளரை கையாள முடியாமல் போகும் போது, அடுத்தது என்ன? ஆட்சி மாற்றம்தான் என்னும் நிலைமை இப்போதும் ஒரு புவிசார் அரசியல் உக்தியாகவே இருக்கின்றது.

இந்த இடத்தில் நான் விவாதிக்க முற்படும் விடயம் வேறு. அறகலய கிளர்ச்சி இடம்பெற்ற போது, தமிழர் பக்கத்தில் அது பெரியளவில் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்தவில்லை. குறிப்பாக தமிழ் இளையோர்கள் மத்தியில் எவ்வித அரசியல் அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை. அது தென்னிலங்கையின் விடயம் என்ற வாங்கியிருந்தது. கொழும்பிலுள்ள சிலர் அதில் பங்கு கொண்டாலும் கூட, அவர்களின் ஈடுபாடு வடக்கு கிழக்கில் அரசியல் அதிர்வுகளை ஏற்படுத்த வில்லை.

யுத்தம் முடிவுற்று பதினேழு ஆண்டுகளாகி விட்டது. இப்போதும் வடக்கு கிழக்கின் தமிழர் அரசியலில் இளையோரின் ஈடுபாடு என்பது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய நிலையில் இல்லை. ஆகக் குறைந்தது அரசியல் தொடர்பில் ஆர்வமுள்ள இளைஞர்களை காண்பதே அரிதானது.

தேர்தல் காலத்தில் மழைக் காலத்து புற்றீசல்கள் போன்று முகம் காட்டுபவர்கள், தேர்தலின் பின்னர் காணாமல் போய் விடுகின்றனர். தேர்தல் காலத்தில் இளைஞர்களின் பெறுமதி என்பது, கட்சிகளின் வேட்பாளர்களுக்கு சுவரொட்டி ஒட்டுவது, கட்சிகளின் கூட்டத்திற்கு ஆட்கள் சேர்ப்பது என்பதாகவே சுருங்கியிருக்கின்றது. பெடியளுக்கு தண்ணி வாங்கிக் கொடுத்தால், அவங்கள் இழுபடுவாங்கள் என்னும் அடிப்படையில் தான், தமிழ் இளைஞர்களை கட்சிகள் புரிந்து வைத்திருக்கின்றன. தேர்தல் காலத்தில் ஒரு குறிப்பிட்ட இளைஞர்கள் கூட்டம் அப்படித்தான் இருக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு பாடசாலை வாயிலில் நின்று, சுமந்திரனை பிரதம விருந்தினராக அழைக்க வேண்டாம் என்று, இளைஞர்கள் சிலர் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். அரசியலை சில தனிநபர்கள் மீதான காழ்புணர்வாகவும் எதிர்ப்பாகவும் பார்க்கும் போக்குத் தான் பின் யுத்த தமிழ்த் தேசியமாக கற்பிக்கப்படுகின்றது. அப்படிப் புரிந்து கொள்ளுமாறு தான், தமிழ் அரசியல்வாதிகளின் போதனைகளும் இருக்கின்றது.

ஆனால் இந்த அரசியல் இளையோருக்கு தேவையில்லாத அரசியல். இளையோர்கள், அரசியலை புதிதாக அணுக வேண்டியவர்கள். புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டியவர்கள். முன்னோர்களின் காழ்ப்புணர்வை, வெறுப்பு வாதங்களை சுமக்க வேண்டிய எந்த அவசியமும் இளையோருக்கு இல்லை. செல்வநாயகம் சொன்னார், பிரபாகரன் கூறினார் இவைகள் எல்லாம் இளையோருக்கும் தேவையில்லை. அன்று கூறப்பட்டவற்றில் எது இன்றைக்குத் தேவையானதோ, அவற்றை எடுத்துக் கொள்வதில் தவறில்லை ஒரு வேளை ஒன்றுமே தேவையில்லை என்றால் புதிதாக ஒன்றைச் சிந்திக்க வேண்டியதே, ஜென்சிகளுக்கான அரசியல். முன்னைய வரலாறு கற்றலுக்கான ஒன்று மட்டும்தான்.

ஒவ்வொரு முள்ளிவாய்க்காலின் போதும் உணர்ச்சி வசப்படுவதற்கும், தலையில் பட்டிகளை கட்டிக் கொண்டு மோட்டார் பவனியில் ஈடுபடுவதற்கும் அப்பால், தமிழ் ஜென்சிகளின் அரசியல் புரிதல் என்ன? — இப்படிக் கேள்வி எழுப்பினால் பதில் கவலைக்குரியதாகவே இருக்கும்.

உண்மையில் தமிழ் ஜென்சிகளை நாசப்படுத்தியதில், ஒரு சில தமிழ் புலம்பெயர் குழுக்களின் தலையீடுகளுக்கு முக்கிய பங்குண்டு. அரசியலை மலினமாக புரிந்து கொள்ளுவதற்கான செயற்பாடுகளையே, சில குழுக்கள் செய்து வருகின்றன. அரசியலை அதன் ஆழ அகலத்தில் புரிந்து கொள்ளும் அரசியல் கல்வியூட்டலுக்கான களம் வடக்கு கிழக்கில் எங்குமே இல்லை. கட்சிகளும் அதில் கவனம் செலுத்துவதில்லை கட்சிகளுக்கு வெளியிலும் எவரும் அவ்வாறு சிந்திக்கவில்லை. இதன் விளைவு, அரசியல்ரீதியில் தமிழ் ஜென்சிகள் என்னும் வகைப்படுத்தலுக்கான சூழல் வடக்கு கிழக்கில் இல்லை.

பின் யுத்த அரசியல் உரையாடல்கள் மிகவும் மேலோட்டமானவையாகவே இருக்கின்றது. இவற்றில் தொன்னூறு விகிதமான அரசியல் உரையாடல்கள், யாழ் குடநாட்டுக் கதைகளாகவே சுருக்கியிருக்கின்றது. மாற்றுக் கருத்துள்ளவர்கள் அனைவரும் ஒரே மேடையில் அமர்ந்து விவாதிக்கும் அரசியல் அரங்குகளை காண முடியவில்லை. 2009இற்கு பின்னரான அரசியல் உரையாடல்கள் அடிப்படையில் அவ்வாறானதாகவே இருந்திருக்க வேண்டும். ஆனால் யுத்த காலத்தில் கடைப்பிடித்தது போன்ற சுயதணிகை அரசியல் தான் இப்போதும் தொடர்கிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகளாக தங்களை அடையாளப்படுத்துவர்களுக்கு வரையறைகள் உண்டு. அவர்களிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது என்பது உண்மைதான். அதனால்தான் நான் தொடர்ந்தும் வாதிட்டு வருகின்றேன். தற்போதுள்ள கட்சிகளுக்கு வெளியில் இந்த உரையாடல் இடம் பெற வேண்டும். பாரம்பரிய கட்சிக் கதைகளை உடைத்தெறியும் புதிய தலைமுறையொன்று வெளியில் வர வேண்டும். அவை அனைத்தின் மீதும் கேள்விகளை முன்வைக்க வேண்டும். கட்சிகள் மீதும் கேள்விகளை தொடுக்க வேண்டும், கருத்துருவாக்கத்தின் மீதும் கேள்விகளை தொடுக்க வேண்டும்.

இன்றைய உலக அரசியல் வேகமாக மாறிவருகின்றது. இதுவரையில் உலகம் இயங்கியது போன்ற நிலையில் இப்போதில்லை. அமெரிக்காவின் தற்போதைய அணுகுமுறை உலக அரசியலில் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. கனடிய பிரதமரின் வார்த்தையில் கூறுவதானால், இது ஒரு முறிவு. ஏனெனில், யார் நண்பர், எதுவரை நண்பர் என்று தெரியாதவொரு உலக அரசியல் சூழலே காணப்படுகின்றது.

உலகை வழிநடத்தும் ஒரு தலைமை இப்போதில்லை என்னும் நிலைமை காணப்படுவதாகவே, நிபுணர்கள் விவாதித்துவருகின்றனர். மனித உரிமை சார்ந்து, ஜனநாயகம் சார்ந்து நீங்கள் முறையிட ஒரு உலகத் தலைமை இப்போதில்லை. இந்த நிலையில் வழமையான தமிழ் அரசியல் உரையாடல்கள் மிகவும் பலவீனமான நிலையை எட்டிவிட்டது. அடுத்த கட்டம் தொடர்பில் கற்பனை கூடச் செய்ய முடியாதவொரு அரசியல் சூழலே நமக்கு முன்னால் தெரிகின்றது. இவ்வாறானதொரு அரசியல் சூழலில் புதிய அரசியல் தலைமுறை ஒன்றிற்கான தேவை பெரிதாக இருக்கின்றது. அது அவசரமானதும் கூட. ஆனால் பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் பிரச்சினை. தெற்காசியாவின் இசட் தலைமுறையினரின் அலை, தமிழ்த் தேசிய ஜனநாயக அரசியலில் தாக்கங்களை ஏற்படுத்தும் அதியசம் நிகழுமா?

## சர்வதேச விசாரணைகளை ஏற்றுக் கொள்ளாத....

(16ம் பக்கத் தொடர்ச்சி) சேர்ந்த ஊடகவியலாளாளர் மயூரப்பிரியன் பின்வருமாறு சமூக ஊடக வலைத்தளத்தில் எழுதியதை.இப்பொழுது அமைச்சர்களாக இருக்கும் முன்னாள் தோழர்கள் வாசித்திருப்பார்களா? மாவட்டச் செயலகத்தின் வாசலில் உள்ள பதாகையில் தமது பிரார்த்தனைத் துண்டுச் சீட்டுக்களை 'பின்'பண்ணி வைத்திருந்தார்கள். அதில் எவனும்.தனக்கு மூக்குக் கண்ணாடி தா.வீடு தா எனக் கேட்கவில்லை. அந்த மண்டபத்தில் வைத்து பிள்ளைக்கு என்ன நடந்தது என்ற உண்மை தெரிய வேணுமா? வீட்டு திட்டம் வேணுமா? எனக் கேட்டிருந்தால் மூஞ்சியில காறித் துப்பிட்டுப் போயிருப்பாங்க

## நேபாள வெள்ளத்தில் ஈழத்தமிழ்ப் பொறியியலாளர்

(24ம் பக்கத் தொடர்ச்சி) குழுவில் 15 அவுஸ்திரேலியர்கள் இருந்த நிலையில், தற்போது வரை நேபாள வெள்ளத்தில் 43 அவுஸ்திரேலியர்களைக் காணவில்லை என அவுஸ்திரேலிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். காணாமல் போன தம் உறவினர்களைப் பற்றிய தகவல்களைப் பெற அவுஸ்திரேலியாவில் உள்ள ஷைலஜாவின் சகோதரி மற்றும் குடும்பத்தினர் அதிகாரிகளையும் கற்றுலா ஏற்பாட்டாளர்களையும் தொடர்ந்து தொடர்புகொண்டு வருகின்றனர்.

# எமது தொல்லியல் மரபுரிமை அடையாளங்களை நாமும் பாதுகாக்கலாம்

சிறீலங்கா அரசு சிங்களவர்கள் மற்றும் போர்க்குற்றவாளிகளைக் கொண்ட அரச தலைவர் செயலணி ஒன்றை தொல்பொருள் ஆய்வுக்கென அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நியமித்துள்ளது. இது தமிழ் இனத்தின் வரலாற்றை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கை என்பது தெளிவனது.

இந்த நிலையில் இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் வரலாற்றுத்துறை தலைவரும் மூத்த பேராசிரியருமான பரமு புஸ்பரத்தினத்துடன் நாம் மேற்கொண்ட நேர்காணலை இங்கு தருகின்றோம்.

பேராசிரியர் புஸ்பரத்தினம் அவர்கள் யாழ் கலாச்சார நிலைய பணிப்பாளராக பணியாற்றி வருவதுடன் தொண்டிமீள் புனரமைப்பு பிரிவின் முக்கிய ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி– எமது வரலாற்று தொல்பொருட்களை பாதுகாப்பதில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு என்று ஒரு சட்ட ஷரத்துக்கள் ஏதாவது இருக்கின்றதா?

பதில்— இலங்கை தொல்லியல் சட்டத்தில் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மண்ணிற்குள் புதையுண்ட மண்ணிற்கு வெளியே தெரிகின்ற வரலாற்று பெறுமதியுடைய சான்றுகள் அனைத்தும் குறிப்பிட்ட பிரதேசத்தின் மரபுரிமைச் சின்னங்களாக பிரகடனப் படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் இடமுண்டு.

அந்த மரபுரிமைச் சின்னங்கள் ஒரு தொல்லியல் திணைக்களத்தால் அடையாளபடுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப் பட்டு பாதுகாக்கப்படுவதற்கு சட்டத்தில் இடமுண்டு. அதை தொல்லியல் திணைக்களம் மட்டும் தான் செய்ய வேண்டும் என்பதில்லை. பொது அமைப்புக்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு அந்த மரபுரிமைச் சின்னங்களை கண்டறிந்து, பாதுகாப்பதற்கும், அதை ஒரு மரபுரிமைச் சின்னமாக தொல்லியல் திணைக்களம் ஊடாக பிரகடனப் படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு.

உதாரணமாக வடமாகாண முதலமைச்சராக கௌரவ நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் பணியாற்றிய கால கட்டத்தில் அவரின் முயற்சியால், கலாச்சார திணைக்கள பணிப்பாளர் நாயகமும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தையும் அழைத்து ஒரு கலந்துரையாடல் மேற்கொண்ட போது இந்தக் கேள்வியை நான் அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் தங்கள் அனுமதியோடு இந்த மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை போன்றவை சில வருமானங்களை ஈட்டுவதற்கும் இடமுண்டு என்பதை அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

ஆகவே எங்கள் மரபுரிமைச் சின்னங்களை நாங்களே பாதுகாப்பதற்கு சட்டத்தில் இடமுண்டு. உதாரணமாக கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் ஹிஸ்புல்லா அவர்களின் முயற்சியால் கிழக்கிலங்கையில் பல மில்லியன் ரூபாய்கள் செலவில் ஒரு இஸ்லாமிய கலாசார அருங்காட்சியகம் ஒன்று உருவாக்கப்பட்டதை இந்த இடத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

கேள்வி– எந்த வகையில் தமிழர்களின் வரலாற்று சான்றிதழ்களை உலகில் ஏதேனும் ஒரு அமைப்புக்கள் மூலம் பாதுகாக்க முடியும்? அல்லது பாதுகாக்க வேண்டும்?

பதில்–அ து செய்வதற்கு இடமுண்டு. பருத்தித்துறையில் தெருமூடி மடம் என்பது சுவிஸில் உள்ள பருத்தித்துறை பொது மக்களின் ஒன்றியத்தின் முயற்சியால் பாதுகாக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவில் வரலாற்றுப் பழைமை வாய்ந்த திருக்கு மரமும் அதனோடு இணைந்த வரலாற்றுச் சின்னங்களும் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப் பட்டுள்ளது.

ஆனால் இந்த மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கின்ற போது, அதற்கான உதவிகளை வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்குகின்ற போது தனிப்பட்டவர்கள் அந்த நிதியை பெற்றுச் செய்வதில் சில சட்டச் சிக்கல்கள் உண்டு. தப்பான விமர்சனங்கள் உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே அந்த நிதியை ஒரு அரசாங்க அதிபர் ஊடாக அல்லது பிரதேச செயலாளர் ஊடாக அல்லது பல்கலைக்கழகத்தின் ஊடாக நாங்கள் நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு மரபுரிமைச் சின்னத்தை வெளிநாட்டு உதவியோடு மீள் புனரமைப்புச் செய்கின்ற போது அதற்கான ஒரு முன்மொழிபை தொல்லியல் திணைக்களத்திற்கு அனுப்பி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் சட்டச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பில்லை.



அது மட்டுமல்லாமல் அவ்வாறு செய்வதை தொல்லியல் திணைக்களம் அங்கீகரிக்கவும் தயாராக இருக்கின்றது. அவர்களுடைய மேற்பார்வைகளும் சில ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே எங்கள் மரபுரிமைச் சின்னங்களை ஒரு வெளிநாட்டு உதவியோடு நாங்கள் பாதுகாப்பதற்கு சட்டத்தில் இடமுண்டு.

இந்த இடத்தில் இன்னுமொன்றை குறிப்பிட விரும்புகின்றேன். இலங்கையில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இடங்களில் மரபுரிமை சின்னங்கள் உண்டு. அவை அனைத்தும் பாதுகாக்கப்பட்டதாக கூற முடியாது. எங்களின் பிரதேசத்திலுள்ள மரபுரிமைச் சின்னங்களை அரசு அல்லது தொல்லியல் திணைக்களம் என்பன பாதுகாக்க முற்படவில்லை என்ற ஒரு விமர்சனம் இருப்பதையும் நான் நன்கு அறிவேன். ஆனால் நாங்களாகவே முயற்சி எடுத்து எங்களின் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

கேள்வி– நிலத்துக்கு கீழான அகழ்வுகள் மேற்கொள்ளப்படாமலேயே 2300 ஆண்டுகள் தொன்மையான தொல்பொருட்கள் எமது ஈழ தேசத்தில் கண்டறியப்பட்டிருக்கின்றன. இந்நிலையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இடம் பெறுகின்ற போது அதற்கு முந்தைய பல தொல்பொருட்கள் கிடைப்பதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கிறது. இந்நிலையில் இலங்கையில் அகழ்வாராய்ச்சிகள் இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றனவா?

பதில்– நிறைய இருக்கின்றது. இலங்கையில் 1970இற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் தமிழ் மொழியின் தொன்மை, தமிழர் பண்பாடு தொடர்பான பல ஆதாரங்கள் தென்னிலங்கையிலும் கண்டு பிடிக்க்பபட்டுள்ளது. வட இலங்கையிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் ஒரு தொய்வான நிலை காணப்படுகிறது.

ஆனால் நாங்கள் தொல்பொருள் சின்னங்கள் எதிர்பாராமல் கிடைத்தது என்று சொல்வதைவிட அகழ்வாராய்ச்சி மூலம் கிடைத்த சான்றுகளை வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் சில பின்னடைவுகள் உண்டு. அதை தவிர்த்து மக்களிடையே விழிப்புணர்வை கொண்டு வருவதற்கு ஊடகங்கள் மிக முக்கிய பங்காற்ற வேண்டும்.

உதாரணமாக 2017, 2018ஆம் ஆண்டுகளில் கோட்டையிலே மிகப்பெரிய அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழ்வாராய்ச்சிக்கு உலகில் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர் Christopher Davis அவர்களும், அவரின் குழுவினரும் மேற்கொண்ட போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து நானும் எனது மாணவர்களும் பங்கு கொண்டோம்.



அகழ்வின் முடிவிலே கருத்தரங்கு நடைபெற்ற போது, குறிப்பிட்ட யாழ்ப்பாணக் கோட்டை 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் கட்டப்படுவதற்கு முன்பு 2700 ஆண்டுகளுக்கு முன்பே கோட்டைப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்ததற்கும் அந்த மக்கள் தமிழ்நாடு, தென்னிந்தியா, வட இந்தியா, அரேபியா, சீனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் வணிகத்தில் ஈடுபட்டதற்கும் கோட்டை இருந்த பிரதேசம் அன்று தொட்டு மேற்கு ஆசியா,கிழக்கு ஆசியா, தென்கிழக்காசியா, ஆபிரிக்க நாடுகளுக்கு இடையிலான வணிக பரிமாற்று மையமாக இருந்தது என்பதையும் அவரும் நானும் அதைக் குறிப்பிட்டிருந்தோம்.

முக்கியமான ஒரு குறிப்பு. கந்தரோடை, சாட்டி, பூநகரி, அநுராதபுரம், தமிழ்நாடு, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் ஒரு நாகரீகம் பண்பாட்டோடு தோன்றியதோ அந்த மக்கள் யாழ்ப்பாண கோட்டை பிரதேசத்திலும் வாழ்ந்துள்ளார்கள். யாழ்ப்பாண நகரம் என்பது இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆக்கம் பெற்றிருந்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்து எல்லா மக்களிடமும் கொண்டு செல்லப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. இது தொடர்பாக ஆங்கிலத்திலும். தமிழிலும் செய்திகள் பல கட்டுரைகள் வெளி வந்திருக்கின்றது. சில விடயங்கள்



**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**பேராசிரியர்**
**பரமு புஸ்பரத்தினம்**

மக்கள் மத்தியிலே செல்லும் போது எங்களின் மரபுரிமையைப் பற்றி நாம் அறிவது மட்டுமல்லாமல் அவற்றை பாதுகாக்க வேண்டும் என்னும் விழிப்புணர்வு ஏற்படும் என்பது எனது கருத்தாகும். ஆகவே எங்கள் தமிழ் மக்களின் தொன்மையான தொடர்ச்சியான வரலாற்றை கண்டறிவதற்கான ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன. அது மக்களிடம் எவ்வாறு செல்கின்றது என்பதில் தான் ஒரு தொய்வு நிலை காணப் படுகின்றது.

கேள்வி– இலங்கையின் தமிழர்களின் இருப்பையும், தொன்மையையும் எடுத்துக் காட்டுகின்ற வடமாகாணத்தில் காணப்படுகின்ற தொல்பொருள் சான்றுகளில் முக்கியமான சான்றுகளாக நீங்கள் எவற்றைப் பார்க்கிறீர்கள்? அவற்றின் காலமதிப்பீடு தொடர்பான உங்கள் கருத்து என்ன?

பதில் — வடமாகாணத்தில் ஏறத்தாள 380 இற்கு மேற்பட்ட இடங்களில் முக்கிய வரலாற்று மையங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றில் கணிசமானவை தொல்லியல் திணைக்களத்தினால் மரபுரிமை சின்னங்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமான தொல்லியல் மரபுரிமை சார்ந்த இடங்கள் என்று பார்க்கின்ற போது கந்தரோடை ஒரு முக்கியமான தொல்லியல் மரபுரிமை இடமாகப் பார்க்கப்படுகிறது.

கந்தரோடையை ஒத்த தொன்மையான பண்பாடு பிற்காலத்தில் சாட்டி, காரைநகர், பூநகரி போன்ற இடங்களிலும் அண்மையில் கட்டுக்கரை போன்ற இடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கந்தரோடை அகழ்வாய்வில் கிடைத்த சான்றுகளில் இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் தமிழ்நாட்டை ஒத்த மக்கள். இவர்கள் தமிழ்நாட்டிலிருந்து இங்கு வந்திருக்கலாம். அல்லது இங்குள்ள மக்கள் தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கலாம்.

இத்தகைய குடியிருப்பு கந்தரோடை முதல் புத்தளம் வரை பரவியிருந்தது என்ற கருத்தை முன் வைத்திருந்தார். அவர் முன்வைத்த கருத்தை உறுதிப் படுத்தக்கூடிய வகையில் பிற்காலத்தில் பூநகரிகட்டுக்கரை போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழ்வாய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. நீங்கள் கேட்டது போல முக்கிய இடங்களாக கந்தரோடை, பூநகரி, கட்டுக்கரை போன்ற (23ம் பக்கம் பார்க்க)


SAVE THE DAY
2026 OCT 3
SATURDAY @ 6 PM
METROPOLITAN CENTRE
KENNEDY & FINCH
3840 FINCH AVE E, SCARBOROUGH, ON M1T 3T4
Title Sponsor
Vijaya Jewellery
Mukesh
Playback Singer
Magisha
Super Singer
Varsha S krishnan
Zee Tamil Title Winner
Santhosh Subramanian
Playback Singer
Old is gold
Thalalaya
Live Band
Venkat
Tabla
Manikandan
Keybordist
ச ரி
க ம
ப
நெஞ்சம் மறப்பதில்லை
MORE INFO
416-564-9642
416-566-0790
TICKETS $30 | $50 AND VIP

# எமது தொல்லியல் மரபுரிமை அடையாளங்களை நாமும் பாதுகாக்கலாம்

(21ம் பக்கத் தொடர்ச்சி) இடங்களைக் குறிப்பிடலாம். இவற்றை விட முக்கியம் என்று சொன்னால் 2017ஆம் ஆண்டு கிழக்கிலங்கையில் கிளிவெட்டியில் திருமங்கலா என்ற இடத்தில் ஆய்வு செய்த போது, இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கு அந்த இடங்களிலே தமிழ் மக்கள் வழிபட்ட ஆலயங்கள் இருந்ததற்கு நம்பகரமான கல்வெட்டு ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. திருமங்கலா என்ற இடத்தில் 1964இல் இருந்து மக்கள் புலம் பெயர்வதற்கு முன்னர் பல ஆண்டு காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளது.

மூன்றாவதாக 2017ஆம் ஆண்டிலிருந்து கட்டுக்கரையில் மிகப் பெரிய அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பொழுது நாங்கள் கீழடி அகழாய்வை முதன்மைப்படுத்தும் அதே நேரத்தில் கட்டுக்கரையில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்களையும் கருத்திற் கொள்ள வேண்டும். நான் நினைக்கிறேன் கந்தரோடையை அடுத்து வட இலங்கையில் தொன்மையான பூர்வீகமான மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கட்டுக்கரையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுக்கரையை பார்வையிட்ட தென்னிந்திய தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் ராஜன் அவர்கள் கொடுமணல், பொருந்தல் போன்ற ஒரு தொன்மையான மக்கள் குடியிருப்பு கட்டுக்கரையில் வாழ்ந்ததாக குறிப்பிடுகின்றார். இந்த அகழ்வாராய்ச்சியை பார்வையிட்ட தென்னிலங்கை அறிஞர்கள் கூட மாதகலில் இருந்து அநுராதபுரம் செல்கின்ற வழியில் ஒரு தொன்மையான நகரமாக இது எழுச்சி பெற்றிருக்கின்றது என்பதை அந்த ஆதாரங்கள் உறுதிப்படுத்துவதாக குறிப்பிடுகின்றனர். அதை விட யாழ்ப்பாணத்தில் மட்டும் 86 இடங்கள் முக்கிய தொல்லியல் இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அனைத்தும் முக்கியமான தொல்லியல் மையங்கள் தான். அவற்றிற்கு இடையில் எங்களின் பூர்வீக இருப்பை அடையாளப்படுத்தக்கூடிய தொல்லியல் இடங்களாக கந்தரோடை, பூநகரி, சாட்டி கட்டுக்கரை போன்ற இடங்களைப் பார்க்கின்றேன்.

கேள்வி – இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்களையும் தமிழர்களின் தொல்பொருட்களையும் பாதுகாப்பது மற்றும் அகழ்வாராய்ச்சி பணிகளில் ஈடுபடுவதில் பல்வேறு நெருக்கடிகளும். சிக்கல்களும், அடக்குமுறைகளும் இருக்கின்றது. இந்த அடக்குமுறைகளை களைவதற்கு புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் எந்த வகையான தங்களின் பங்களிப்பை செய்ய வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

பதில்— எங்கள் பகுதிகளில் அகழ்வாய்வுகளை மேற்கொள்வது, பாதுகாப்பது போன்றவற்றில் சில சட்டச் சிக்கல்கள் உண்டு என்றாலும், அவற்றிலிருந்து விடுபட்டு நாங்கள் அதை செய்வதற்கு சட்ட ரீதியிலான வாய்ப்புக்கள் உண்டு. உதாரணமாக 2019–2020 ஆண்டுகளுக்கான அனுமதியை நான் தொல்லியல் திணைக்களத்தில் பெற்றிருக்கின்றேன். நான் எந்த நேரத்திலும் போய் அங்கு அகழ்வு செய்வதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் சூழ்நிலைகள் சாதகமாக இல்லாமையினால், கைவிடப்பட்டுள்ளது. ஆனால் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்க எவ்வளவு உதவும் என்பதில் எங்களுக்கு தடைகள் இருந்தாலும், எங்கள் மக்களாக வந்து அவற்றை பாதுகாப்பதில் தடைகள் இல்லை.

கலாநிதி திருமுருகன் அவர்கள் சிவபூமியிலே மூன்று மாடிகளைக் கொண்ட பெரிய அருங்காட்சியகம் ஒன்றை அமைத்திருக்கின்றார். அங்கு எங்களிடமிருந்து மறைந்து போகின்ற, அழிந்து போகின்ற அல்லது விற்கப்படுகின்ற பல மரபுரிமைச் சின்னங்களை மக்கள் முன்வந்து பாதுகாப்பதில் எந்தவித தடையும் இல்லை. அதை தடுப்பதற்கு தொல்லியல் திணைக்களம் முயலும் என்று நான் கருதவில்லை. அனுமதி பெற்று அந்த தொல்லியல் சின்னங்களை நாம் பாதுகாக்க முடியும்.

இப்படியான அகழ்வாராய்ச்சிகளை, மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு புலம்பெயர் மக்களால் தான் அதை செய்ய முடியும். ஆனால் இங்குள்ளவர்கள் அதை செய்வதற்கு சட்டச் சிக்கல்கள் வராமல் இருப்பதற்கு நான் முன்னர் சொன்னது போல இங்குள்ள மரபுரிமைச் சின்னங்கள் புலம்பெயர் நாடுகளில் பேணப்படலாம். ஆவணப்படுத்தலாம். அதை அவர்கள் செய்திருக்கிறார்கள்.

உதாரணமாக சுவிஸ் தமிழ் கல்விச் சேவை, தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை ஆவணப்படுத்தியிருக்கிறார்கள். அதன் இயக்குநராக உள்ள திரு. பார்த்திபன் கந்தசாமியினுடைய முயற்சியினால் எங்களின் மரபுரிமைச் சின்னங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. வடபகுதியிலோ அல்லது தமிழ்ப் பிரதேசங்களிலோ ஆய்வு செய்வதற்கும் மரபுரிமைச் சின்னங்களை பேணிப் பாதுகாப்பதற்கும் புலம்பெயர் தமிழர்கள் உதவி செய்வதற்கு தடையில்லை.

ஆனால் அவர்களின் நிதி அரச அதிபர், அல்லது பல்கலைக்கழகம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு அமைப்பின் ஊடாக மேற்கொள்ள வேண்டும். தனிப்பட்ட ஒருவரிடம் வரும் போது பல விமர்சனங்கள் வருவதற்கும் சில சட்டச் சிக்கல் வருவதற்கும் வாய்ப்பு உண்டு. ஆகவே சட்ட ரீதியான முறையை அணுகி புலம்பெயர் தமிழர்கள் இங்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் உங்களுடைய மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கும் உதவ முடியும் என்பது தான் எனது கருத்து.

அதற்காகத் தான் குறிப்பிட்டிருந்தேன். கிழக்கிலங்கையில் பல மில்லியன் செலவில் இஸ்லாமிய கலாச்சார சின்னங்களை பேணிப் பாதுகாப்பதற்கான ஒரு அருங்காட்சியகம் கிழக்கு மாகாண சபையால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப்படியான ஒரு முயற்சியை வடமாகாண சபையும் செய்திருக்கலாம். ஆனால் செய்ய முடியவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும்.

மூன்றாவது மிகப்பெரிய குறைபாடு எங்களின் மக்கள் எங்களின் மரபுரிமைச் சின்னங்கள் இருக்கும் இடங்களிலே குடியிருப்புகளை, சாலைகளை அமைத்திருப்பதனாலே அந்த இடங்களில் அகழாய்வு செய்வதற்கு அல்லது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு மக்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். ஏனெனில் தொல்லியல் சட்டத்தில் ஒரு மரபுரிமைச் சின்னம் ஒரு தனி மனிதருடைய காணியில் இருக்குமானால் அவருடைய அனுமதியுடனேயே தொல்லியல் திணைக்களமும் அதனை பாதுகாக்கலாம். தனிப்பட்ட நிறுவனங்களும் பாதுகாக்கலாம். ஆனால் அதை செய்வதற்கு தனிப்பட்ட நில உரிமையாளர்கள் முன் (18ம் பக்கம் பார்க்க)

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation



Vilosanan Sivatharman
416-993-0826



Christeen Seevaratnam
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com




# கலிபோர்னியாவில் 2 இந்திய இளம்பெண்கள் நண்பியால் படுகொலை

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள மில்பிடாஸ் நகரில் இரு இந்திய இளம் பெண்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம், அமெரிக்க வாழ் புலம்பெயர் சமூகத்தினரை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

திருச்சூர் பாணஞ்சேரி, மண்ணுத்தி, முடிக்கோடு தெக்கூட்டு வீட்டைச் சேர்ந்த ஹரிதாஸ் மற்றும் சுஷ்மா தம்பதியரின் மகள் அஞ்சனா மற்றும் கோட்டயம் சிங்கவனம் பகுதியைச் சேர்ந்த ஆன் ஆகிய இருவருமே இந்தக் கொடூர சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவருக்கும் நெருங்கிய தோழியும், அதே அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் வசித்து வந்தவருமான அனிலா என்ற பெண், இந்தக் கொலைகளைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தற்போது போலீஸ் காவலில் உள்ளார்.

ஒரே அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் வசித்து வந்த இந்த மூன்று குடும்பங்களுக்கும் இடையே மிகவும் நெருக்கமான நட்பு இருந்ததாக கூறப்படுகிறது. ஆசிரியையாக பணியாற்றி வந்த அஞ்சனா கடந்த எட்டு ஆண்டுகளாக கலிபோர்னியாவில் வசித்து வந்தார். மென்பொருள் பொறியாளரான தனது கணவர் விஜீஷ் மற்றும் ஆறு



வயது மகள் வாமிகாவுடன் அஞ்சனா வசித்து வந்தார். சமீபத்தில் நடைபெற்ற ஓணம் கொண்டாட்டங்களிலும், அஞ்சனா உள்ளிட்ட மூவரும் தங்களது நண்பர்களுடன் ஒன்றாகக் கலந்து கொண்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட் 28ஆம் தேதி, வெள்ளிக் கிழமை மதியம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தக் கொலைச் சம்பவங்கள் அரங்கேறின. வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அஞ்சனாவின் கணவர் விஜீஷ், சம்பவ இடத்திலிருந்து நிற்காமல் வேகமாகச் சென்ற அனிலாவின் நீல நிற காரைக் கவனித்துள்ளார். இதனால் சந்தேகம் அடைந்த விஜீஷ் உடனடியாக ஆனின் கணவர் ஜேக்கப்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவலை தெரிவித்துள்ளார். ஜேக்கப் ஆனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றும் முடியவில்லை.

இதையடுத்து அவர் குடியிருப்புக்குச் சென்று பார்த்தபோது, ஆன் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டுள்ளார். அதே நேரத்தில், விபத்து குறித்த தகவலை அறிந்து விஜீஷ் சம்பவ இடத்துக்கு வந்து சேரும் முன்பே அஞ்சனாவும் உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அஞ்சனா மற்றும் விஜீஷின் ஆறு வயது மகள் வாமிகா வீட்டின் அறைக்குள் இருந்ததாக கூறப்படுகிறது. சம்பவத்திற்குப் பிறகு, நீல நிற எஸ்.யு.வி. கார் ஒன்று அதிவேகமாக அங்கிருந்து சென்றதைப் பார்த்ததாக நேரில் பார்த்தவர்களும் போலீசாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர். இதையடுத்து போலீசார் நடத்திய தேடுதல் நடவடிக்கையில், அருகிலுள்ள ஒரு பார்க்கிங் பகுதியில் பலத்த சேதமடைந்த நிலையில் அந்த வாகனம் கண்டு பிடிக்கப்பட்டது.

தொடர்ந்து அனிலாவையும் போலீசார் காவலில் எடுத்தனர். நெருங்கிய நண்பர்களாகப் பழகி வந்த இந்த மூவருக்கிடையே திடீரென கொலைச் சம்பவம் நிகழும் அளவுக்கு என்ன காரணம் ஏற்பட்டது என்பது இது வரை தெளிவாக தெரியவில்லை.

காவலில் உள்ள அனிலாவிடம் அமெரிக்க போலீசார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விசாரணையின் மூலம் கொலைக்கான உண்மையான காரணம் மற்றும் சம்பவத்தின் பின்னணி குறித்த கூடுதல் தகவல்கள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நேபாள வெள்ளத்தில் ஈழத்தமிழ்ப் பொறியியலாளர் குடும்பம் மாயம்!

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரைச் சேர்ந்த தமிழ்ப் பொறியியலாளர் 47 வயது சந்திரசேகரன் முரளிதரன், 42 வயதான அவரது மனைவி ஷைலஜா முரளிதரன் மற்றும் அவர்களின் இரு மகன்களான 14 வயதான அஷ்வின், 11 வயதான ஆருஷ் ஆகியோர் நேபாள திபெத் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட கோர திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்கி மாயமாகியுள்ளனர்.

கைலாஷ் மலை யாத்திரைக்காக 'ஹிமாலயன் கிளேசியர் அட்வென்ச்சர்ஸ்' அமைப்பின் மூலம் சுற்றுலாப் பயணிகளாகச் சென்ற இந்தக் குடும்பத்தினர் 26 ஆம் திகதி காலை உணவை முடித்து விட்டு, நேபாள – சீன எல்லையான ரசுவாகதி பகுதி நோக்கி குடிவரவுப் பணிகளுக்காகப் புறப்படத் தயாராக இருந்த போதே இவர்கள் குடும்பத்தினருடன் கடைசியாக தொடர்பு கொண்டுள்ளனர். அதன் பின்னர் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கால் தொலைத் தொடர்பு, மின்சாரம் மற்றும் வீதிகள் முற்றிலும் சீர்குலைந்ததால், அவர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது

திபெத் நேபாள எல்லைக்கு அருகிலுள்ள குடியேற்றச் சோதனைச் சாவடியை நோக்கிச் செல்ல அவர்கள் தயாராக இருந்த போது தான் இந்தத் பேரிடர் நிகழ்ந்துள்ளது. இந்த வெள்ளப்பெருக்கால் அப்பகுதியில் கிராமங்கள், சாலைகள் மற்றும் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டு மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளதுடன், பலியானவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் பென்னி வோங், நேபாளப் பகுதியில் குறைந்தது 39 ஆஸ்திரேலியர்கள் மாயமாகியுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளதோடு, அவர்களைத் தேடும் பணியில் அவசர அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கோப்பாயைப் பூர்வீகமாகக் கொண்ட சந்திரசேகரன் மற்றும்



அவரது மனைவி அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்த முதல் தலைமுறையினர் ஆவர். இவர்களது இரு மகன்களும் அவுஸ்திரேலியாவிலேயே பிறந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் காணாமல் போன தமிழ்க் குடும்பத்தினர் மற்றும் அனைத்துப் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பான திரும்புதலுக்காகவும், மீட்புப் பணிகளுக்காகவும் தமிழ் அவுஸ்திரேலிய சமூகமும் உலகத் தமிழர்களும் பிரார்த்தனை செய்து வருகின்றனர். இவர்கள் பயணித்த (20ம் பக்கம் பார்க்க)